பக்கங்கள்-16 30.சித்திரை.2023 விலை–50.00




# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –413

## யாழ்ப்பாணத்தில் ஜாதியத்தை ஒரு போதும் ஒழிக்க முடியாது!

## விபுலானந்த அடியார் ,சிவசேன தலைவர் , அருண் சித்தார்த்தனுடன் கைகோர்ப்பது ஆபத்து!



## பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஏன் ஆபத்தானது?

## அம்பிகா சற்குணநாதன்




## சிவசேன அமைப்பு யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கின்றதா?




## தமிழ் தரப்பு அரசுக்கு எதிராக போராட்டங்களை வலுவாக முன்னெடுக்க வேண்டும்



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# யாழ்ப்பாணத்தில் சாதியத்தை ஒரு போதும் ஒழிக்க முடியாது!




இனவாதம். மதவாதம். தேசியவாதம். ஜாதிவாதம் போன்ற விவகாரங்கள் தற்பொழுது தலைதூக்கி நிற்கின்றன. எனவே இந்த பிரச்சனைகளை நாம் பார்க்கின்ற பொழுது யுத்தத்தின் பின்னர் தான் மிக வேகமாக பரவிவருகின்றது. யாழில் ஜாதியத்தை ஒழிப்பதற்கு பலர் முயற்சிகளை எடுத்தார்கள் ஆனால் தோல்வியில் தான் அனைத்தும் முடிவடைந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலத்திலும் சாதியத்தை அடியோடு ஒழிப்பதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டது. ஆனால் இறுதியிலே அவை தோல்வியிலே முடிவடைந்தது. விடுதலைப்புலிகளாலும் அது முடியாமல் போனது. என்னவென்றால் குறிப்பாக யாழில் இருக்கின்ற ஜாதியவாதம் என்பது ஏனைய இடங்களில் இருப்பது போன்றல்ல. ஜாதி திமிர் என்பது அனைத்து இடங்களிலுமே இருக்கின்றது. குறிப்பாக சிங்களவர்களிலும் கூட உடரட்ட. பாடரட்ட போன்ற ஜாதிகள் இருக்கின்றன. அது போன்று மலையகத்தை எடுத்தால் அங்கும் ஜாதிகள் இருக்கின்றன. இப்படி மன்னார் முல்லைத்தீவு.வன்னி.யாழ்ப்பாணம். மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி இப்படியெல்லாம் பல இடங்களிலும் இந்த ஜாதியவாதங்கள் இருக்கத்தான் செய்கின்றது.

## விபுலானந்த அடியார், சிவசேன தலைவர், அருண்சித்தார்த்தனுடன் கைக்கோர்ப்பது ஆபத்து!

அருண் சித்தார்த்தன் என்பவர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற ஒருவர் மத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்த சாதியவாதத்தை உள்ளே கொண்டு வந்து அதில் தான் அரசியல் குளிர்காயலாம் என்ற ஒரு விடயத்தை அவர் நடத்திக்கொண்டிருக்கின்றார். அங்கஜன் அவர்களுடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அவர் கடந்த காலங்களில் போட்டியிட்டிருந்தார். அதன் பின்னர் மகிந்த ராஜபக்ச மற்றும் இராணுவ புலனாய்வு ஏனைய அரச அடிவருடிகளுடன் தான் அவரது தொடர்புகள் எல்லாம் இருந்தது அவருடன் தான் அவர் தொடர்பை மேற்கொண்டிருந்தார். நல்லூர் கோவிலை உடைத்து அங்கு மலசலகூடம் கட்ட வேண்டும் என கருத்துப்பட அவர் தெரிவித்தார். அதிலே அவர் அடிப்படையாக தெரிவித்த கருத்தானது ஜாதி பார்ப்பவர்கள் இருக்கும் இடத்திலே நல்லூர் கோவிலில் மட்டுமல்ல ஏனைய கோவில்களிலும் ஜாதி பார்த்தால் அடித்து நொருக்க வேண்டும் என்பதே. இது யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் சாத்தியமுள்ள ஒரு விடயமுமல்ல. அருண் சித்தார்த்தன் ஒரு விடத்தை பார்க்க வேண்டும் கடந்த 30 வருட ஆண்டுகள் மற்றும் அதற்கு முன்னரான ஆண்டுகளில் கூட யாழ்ப்பாணம் எப்படி ஜாதிய கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஜாதியவாதம் எப்படி கையாளப்பட்டது என்ற விடயங்களை பார்க்க வேண்டும். நீங்கள் கூறுகின்ற அந்த இழிவான ஜாதிகளே இன்று ஒரு போராட்டத்திற்கு அவர்கள் அவ்வாறு வரமாட்டார்கள். ஏனென்றால் அந்த இடத்திலே அவர்களுக்கு தெரியும் நாங்கள் எந்த நிலையில் எவ்வாறான இடத்தில் இருக்கின்றோம் என்பது அவர்களுக்கு தெரியும். கோவில்களில் அவர்களை உள் வட்டத்திற்குள் எடுக்கவில்லை அல்லது அவர்கள் சமைக்கின்ற சாப்பாட்டை ஏனைய உயர் ஜாதியினர் சாப்பிடவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எல்லாம் இருக்கின்றன. இதனை நீங்கள் முன்னெடுத்து ஒரு போதும் யாழில் ஜாதியப் பிரச்சனைகளை ஒழித்து விட முடியாது. மறவன்புலவு சச்சிதானந்தன் யார் அல்லது விபுலானந்தர் யார் ஜாதி சம்பந்தப்பட்ட விடயங்களை தூண்டுபவர்கள் எந்த ஜாதியை சேர்ந்தவர்கள் என்பது அனைத்து மக்களுக்கும் தெரியும். பாசையூர். நெடுந்தீவு. புங்குடுதீவு பகுதிகளில் யார் இருக்கின்றார்கள் என்பது மக்களுக்கு தெரியும். அதுபோன்று அராலி மாவடி வட்டுக்கோட்டை நெடுங்கேனி. காரைநகர் பகுதிகளிலும் யார் இருக்கின்றார்கள் என்பது தெரியும். அதுபோன்று வடமராட்சி பகுதிகளிலும் தென்மராட்சி பகுதிகளிலும் யார் இருக்கின்றார்கள். அதுபோன்று பளை வரை யார் யார் எங்கு எந்த குடிகள் இருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. எனவே இதனை அருண் சித்தார்த்தன் அவர்கள் புதிதாக ஒன்றையும் கூற வேண்டிய தேவை இல்லை. ஆனால் ஒரு மதத்தை வைத்துக்கொண்டு ஜாதியத்தை பார்த்து ஜாதியத்தை யாழில் ஒழித்து ஆள வேண்டும் என்ற ஒரு நிலைமையை எடுப்பதன் ஊடாக அதனை இறுதிவரையும் சாதித்து விட முடியாது. நீங்கள் அரசியல் செய்வதற்காக ஜாதியத்தை உங்களது கையில் எடுத்துக்கொண்டு அரசியல் செய்கின்றீர்கள் என்பது புலப்படுகின்ற ஒரு விடயமாக இருக்கின்றது.

எனவே இன்று ஜஸ்போதைப் சம்பந்தப்பட்ட விடயம் இருக்கின்றது. அதுமட்டுமன்றிதமிழ் மக்களின் தீர்வு திட்ட விடயங்களிலே வடகிழக்கிணைந்த தாயகம் அற்றுப்போகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. அதுபோன்று பல இடங்கள் சுவீகரிக்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் அரசாங்கம் எமக்கு எதிராக செய்யும் பொழுது அவற்றை கையில் எடுக்காது மேற்கத்தேய நாடுகளுடைய சில ஆதிக்கத்திற்குள் செயற்படுகின்ற இந்தியாவில் இருக்கின்ற RSS அதுமட்டுமன்றி ஜாதியவாதத்தை தூண்டுகின்ற ஏனைய நாடுகளில் இருந்து வந்தவர்களும் கூட இந்த ஜாதியவாதத்தை யாழ்ப்பாணத்தில் தூண்டுகின்றார்கள். வன்னி மட்டக்களப்பு அல்லது மலையகத்தில் இந்த ஜாதியவாதத்தை கொண்டு செல்வீர்களாயின் அது பெரும்பாலும் கைகூடும். ஆனால் அங்கிருப்பவர்களும் தாம் எந்த ஜாதி என்பதனை தெரிந்திருக்கின்றார்கள். எனவே இந்த ஜாதிக்கு பெண் கொடுக்க முடியுமா? அல்லது இந்த ஜாதியுடன் நான் வாழ முடியுமா? என்பது அவர்களை தீர்மானிப்பார்கள் இன்று ஒரு காதல் திருமணம் என்பது இடம்பெறுகின்றது. அதில் ஜாதி பார்த்து திருமணம் முடிப்பதில்லை. ஆனால் அவ்வாறு திருமணம் நடந்தாலும் யாழில் அவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள். அல்லது வெளிநாடுகளுக்கோ வேறு பிரதேசங்களுக்கோ சென்று வாழுகின்றார்கள். இது நடைமுறையில் இருப்பது அனைவருக்குமே தெரிந்தவொரு விடயம்.

நீங்கள் அரசியல் செய்ய வேண்டுமாக இருந்தால் செய்யுங்கள் அதுபற்றி எமக்கு பிரச்சனையில்லை ஆனால் ஜாதிவாதத்தை வைத்து அரசியல் செய்து கோவிலுக்குள் எங்களை அனுமதிக்கிறார்கள் இல்லை என கூறும் விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. அதனை அடிப்படையாகக் கொண்டு பல காணொளிகளிலே அருண் சித்தார்த்தன் அவர்கள் பேசியிருக்கின்றார். எனவே யாழ்ப்பாணத்தில் ஜாதி தொடர்பாக ஒன்றில் அருண் சித்தார்த்தன் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்ற விடயம் இருக்கின்றது. அருண் சித்தார்த்தனிடம் கேள்வி கேட்ட ஊடக நெறியாளர்களும் கூட அவர் கூறுகின்ற இழிபட்ட ஜாதிகள் மட்டத்திலே அவர்கள் இருந்திருக்கக்கூடும் அல்லது இழிவான சிந்தனை அவர்கள் மத்தியில் இருந்திருக்ககூடும். இந்து கோவில்களுக்குள் செல்லலாம் என்று கூறினாலும் கூட உயர் மட்ட ஜாதிகளில் இருப்பவர்கள் குறைவான ஜாதியினரை வேறு கண்ணோட்டத்தில் தான் பார்க்கின்றார்கள் அதனை நாங்கள் வாழையடி வாழையாக வந்த விடயத்தை இறுதிவரை யாழில் மாற்றி அதனை வெல்ல முடியாது. எனவே ஆன்மீக ரீதியான பாதைக்குள் கொண்டு வந்து இதனை செலுத்தக்கூடாது. இன்று பௌத்த சிலைகளை வடகிழக்கில் அமைக்க வேண்டும் என பகீரங்கமாக கூறுகின்றீர்கள். அதாவது பௌத்த ஆதிக்கம் வடகிழக்கில் வரக்கூடாது என்று ஆயுதம் ஏந்தி போராடினார்களோ அதற்கு எதிரான ஒரு கோசத்தை நீங்கள் முன்கொண்டு வருகின்றீர்கள். பௌத்த விகாரைகளை அதனுடன் சேர்ந்து ஜாதியவாதம் பேசி அரசியலும் செய்கின்ற விபுலானந்த அடியாரும் அதனைத் தான் செய்கின்றார்கள். அண்மையில் அவர் பௌத்த துறவிகளை அழைத்து அவரது ஆதினத்தை திறந்து வைக்கின்ற ஒரு விடயத்தில் அவர் அதனை கையாண்டிருக்கின்றார். இன்று மதம் பரப்பும் செயற்பாட்டை நிறுத்துவது என்பது உண்மையில் சிறப்பான விடயம் அதுமட்டுமன்றி திருக்கேதீஸ்வர வளைவு வெடுக்குநாறி பிரச்சனைகள் இப்படி எல்லாம் பல இருக்கின்றன. இதற்கெல்லாம் புற முதுகை காட்டி ஓடியவர்கள் தான் மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்கள் மற்றும் விபுலானந்த அடியார். அருண் சித்தார்த்தன் அவர்கள் இப்படி இன்னும் 108 இந்து அமைப்புக்களும் புற முதுகை காட்டி ஓடியவர்கள்.



இன்று அவர்கள் புதிதாக ஒரு விடயத்தை கையாளுகின்றார்கள் மதப்பரம்பல் இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்பது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் பிறநாட்டில் இருந்து இங்கு படிப்பிற்காக வருபவர்கள். இங்கு மத போதனையை செய்யக்கூடாது என்று சொல்லி தடுத்து நிறுத்திவிட்டார்கள். இது வரவேற்கத்தக்க விடயம் ஆனால் இதற்குள்ளே கோவில்களுக்குள்ளே ஜாதி வெறியை ஏற்படுத்தி ஜாதியவாதத்தை கொண்டு வருபவர்களுடன் கூட்டு வைத்திருக்கின்ற மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயா அவர்களும் விபுலானந்த அடியார் அவர்களும் இதிலிருந்து விலக வேண்டும். அருண் சித்தார்த்தனுடன் நீங்கள் கூட்டு வைத்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற பொழுது ஜாதி பார்க்க வேண்டும் என்பதனை நீங்கள் எதற்காக மத ரீதியாக பார்க்கின்றீர்கள். ஜாதிக்காக ஒரு கோவிலை யாழில் கட்டித்தான் வைத்திருக்கின்றார்கள். நாங்கள் சிறுவராக இருந்த காலம் தொட்டு அவ்வாறான கோவில்கள் இருக்கின்றது. அந்த கோவில்களுக்கு யார் யார் போவார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

# தமிழ் தரப்பு என்ன செய்ய வேண்டும்!

நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள் சென்று கொண்டிருந்த போது அதனை சீர் செய்யும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளின் காரணமாக இன்று ஓரளவு ஏனும் நாடு முன்னேற்றத்தை கண்டு வருகிறது எனலாம்.

இலங்கையின் சுற்றுலாத்துறை தான் இன்று அந்நிய செலவாணியை எட்டித்தருகிறது என்கிறது அரசு அதேநேரம் நிபந்தனைகளோடு கூட இலங்கை தேசத்திற்கு சர்வதேச நாணய நிதி கடனாக பணத்தை கொடுக்க முன்வந்துள்ள அதே நேரம் தனது சுயலாப நோக்கத்துடன் மேலும் இலங்கை தேசத்தை கடன்சுமைக்குள் தள்ளியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க மதவாத, இனவாத பிரச்சனைகள் நாடளாவிய ரீதியில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக இந்திய அரசு ஆர்.எஸ்.எஸ் , சிவசேன அமைப்புக்கள் குறிப்பாக கத்தோலிக்க பாதிரியமார்கள் என மதவாதத்தை பெரிதுபடுத்துகின்ற செயற்பாடுகளை முன்னெடுப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஜாதிக்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டிருப்பதால் பெரும்பாலும் ஜாதி பார்க்கப்படுகின்றது. அவற்றுக்கு பதிலாக பொதுவாக அணைவரும் வந்து வழிப்படுகின்ற மாதிரியான கோவில்கள் யாழ் மண்ணில் காணப்பட்டால் அணைவரும் ஏகமனதாக கடவுளுக்கான வழிப்பாடுகளை முன்னெடுப்பார்கள். இவ்வாறாக ஜாதி பிரச்சனை, மதப்பிரச்சனை ஒரு புறமிருக்க மறுபுறத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான விவகாரம் தொடர்ந்து கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. ஆட்சிகளும் மாறி மாறி வந்துக்கொண்டிருக்கும் இந்நிலையில் யாராவது இதற்கான தீர்வினை பெற்றுத்தருவார்கள் என ஒவ்வொரு தாய்,தந்தையும் காத்திருந்து காத்திருந்து அவர்களது உயிர்கள் போய்கொண்டு இருக்கின்றது ஒழிய இதற்கான ஒரு தீர்வானது இன்னமும் கிடைக்ககாமல் நிலுவையிலே காணப்படுகின்றது.

அத்துடன் தற்பொழுது புதிய பிரச்சனையாக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமானது காணப்படுகின்றது. அச்சட்டமானது மிகவும் ஆபத்தான ஒரு சட்டமாகவே காணப்படுகின்றது. இராணுவ மயமாக்கல் தற்பொழுதுள்ள **PTA** யில் இராணுவத்திற்கு ஒரு அதிகாரமும் இல்லை. ஆனால் புதிய சட்டத்தில் இராணுவம் ஒருவரை கைது செய்யலாம் கைது செய்ததன் பின்பு 24 மணித்தியாலயம் வரை வைத்திருப்பதற்கு இராணுவத்திற்கு உரிமை இருக்கின்றது. அதன் பின்னர் கட்டாயமாக பொலிஸிடம் அவரை கையளிக்க வேண்டும். மற்றும் இராணுவம் வீதியில் வாகனத்தில் உங்களை தடுத்து சோதிக்கலாம். எனவே இது இராணுவமயமாக்கலை சட்டமாக்குகின்றது. இராணுவ மயமாக்கலை ஒரு சர்வ சாதாரணமாக்குவதற்கு தான் அரசாங்கம் எத்தணிப்பதாக தெரிகின்றது. இவ்வாறாக இச்சட்மானது பல ஆபத்துக்களை கொண்ட ஒரு சட்டமாக பார்க்கப்படுவதால் தான் வடக்கு,கிழக்கில் இச்சட்டத்திற்கு எதிரான கர்த்தால் முன்னெடுக்கப்பட்டு தற்பொழுது பாராளுமன்றத்தில் இச்சட்டமானது பிற்போடப்பட்டுள்ளது. தொடர்ந்தும் எமது நாட்டில் போராட்டங்களும், மத பிரச்சனை, இனப்பிரச்சனை என்று புதிது புதிதாக ஒவ்வவொரு பிரச்சனைகளுக்குமாக மக்கள் இன்று வீதிகளில் இறங்குகின்ற நிலையே காணப்படுகின்றது.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு தமிழ் தரப்பு அரசுக்கு எதிரான அகிம்சை வழியிலான போராட்டங்களை முன்னெடுத்து மக்களுக்கான ஓர் அமைதியான வாழ்வியல் முறையை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.



# கல்லறைப் பூக்கள்



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

"அப்பா கொஞ்சம் கொஞ்கமாக முகாமில் இருந்து ஆக்கள்கள் வெளியில் போறாங்கள் நாங்களும் ஒரு இடம் பாத்துக்கொண்டு வெளியில் போனா நல்லாயிருக்கும். தங்கச்சிக்கும் பாதுகாப்பாக இருக்கும்..."
"ஓம்மடா மகன் அண்டைக்கு கமலி குளிக்கேக்க பெரிய பிரச்சினையா போச்சு... இருந்தும் நான் இருந்ததால், அந்த பொடியல் பேசாம விலத்தி போயிற்றாங்க"
"நானும் 'கெம்பஸ்'சுக்குப் போனா அப்பா நீங்களும் தங்கச்சும் தான்"
"நீ போறதுக்கு முன்னுக்கே அவளுக்கு 'கொலிச்'சுக்கு வந்துரும். மாங்குளத்தில் கடைக்கு வேலைக்குப் போற இடத்தில் இரண்டு மூணு இடம் பாத்திருக்கன். கொஞ்சம் காடா கிடக்குது பாப்பம் சரி வந்தா அங்க போயிருப்பம்..."
"தங்கச்சியும் பாவம் அப்பா நல்ல சாப்படு இல்லை நல்ல உடுப்பும் இல்லை ஒழுங்கா நித்திரை கொள்ள இடமும் இல்லை."
"கண்டறியாத இந்த யுத்தத்தால், இப்படி நாங்கள் எல்லாம் சீரழியிறம்"
**"All people in Jaffna had to displace because of the war"**
"எவிறி கபொடி ஹட் டு ரெலலைஸ் எபவுட் த வோக"
"ஸி கம்ஸ்" என்றான், சாத்.

"என்ன அப்பாவும் மகனும் திட்டம் தீட்டுகிறீங்க?"
"தீட்டம் தீட்டவில்லை. தங்கச்சி எங்கட படிப்பைப் பற்றிதான் அப்பாவும் நானும் கதைத்தனாங்க"
"நீங்க இரண்டு பேரும் கதைத்தது காணும். எனக்கு பசிக்குது"
கனகர் அப்படியே அமர்ந்தவாறு மண்டபத்தில் மாட்டப்பட்டுள்ள சுவர்க்கடிகாரத்தின் மீது தனது பார்வையைச் செலுத்துகின்றார்.
நேரம் ஒன்பது மணியை அண்மித்துக்கொண்டிருந்தது. உடனடியாக தலையில் வலக்கையால் சொறிந்தவாறு "ஓ... மை கோட் நல்லா நேரமாச்சு கமலி ஏழு மணிக்கே சாப்பிட்டுப்படுக்கிறவள் ஆச்சே" என்றார்.

"என்ன மகள் அங்க போய் பார்த்துக்கொண்டிருந்தாய்?"
"இந்த விடில் பூச்சிகளும் விளக்குகளும் பட்டப்பாட்டைப் பார்க்க"
"பாத்திட்டாயா?"
"ஓம்"
"சரி இனி மகளும் தகப்பனும் தொடங்கிட்டிங்களா.? வாங்கம் சாப்பிட்டுட்டுப் படுப்போம்" என்றவாறு எழுந்து ஒரு கையில் தண்ணீர் போத்தலுடனும் மற்றைய கையில் ஒரு கோப்பையில் ஒரு ராத்தல் பாணும் மூன்று வாழைப்பழங்களுடனும் சாப்பாட்டுப் பொது மறைவிடத்தை நோக்கிப் பயணமானான். கனகர் கையில் தீப்பெட்டியுடனும் கமலி கையில் மெழுகுவர்த்தியுடனும் அவன் பின் சென்றனர். கார்த்திகை மாதத்தில் ஈசல் பூச்சிகளைக் கண்டு வல்லுறுகளும் பருந்துகளும் காகங்களும் தாழ்வாக பறப்பதைப் போல ஆடவர்கள் சிலர் சாப்பாட்டுப் பொது அறைக்குப் படையெடுத்தனர். கமலி அப்பாவும் அண்ணாவும் அருகில் வருவதாலும் தன்னுடைய தெளிந்த அறிவாலும் - புத்திசாலித்தனத்தாலும் - கம்பீரமாக வந்தாள்.

09

மழைத்துளிகள் இடையிடையே ஒன்று இரண்டு விழுகின்றன் சிலரது கைகளிலிருந்து குடைகள் விரிகின்றன சிலரது உடல்களில் மழை அங்கிகள் ஏறுகின்றன சிலர் தாவாறங்களை நோக்கி ஓடுகின்றனர், பெண்கள் சிலர் தாம் அணிந்துள்ள சேலையின் முந்தாணைகளைத் தலைகளின் மேல் முக்காடு போடுகின்றனர், சிலர் தாம் கைகளில் வைத்திருந்த பொருட்களினைத் தலைக்கு மேல் தூக்கி வைக்கின்றனர். ஆண்கள் சிலர் தோள்களில் கிடந்த சால்வைத் துண்டுகளைத் தலைக்கு மேல் போடுகின்றனர். கனகர் மட்டும் மழையைப் பொருட்படுத்தாமல் 'மினி பஸ்' வரவிற்காய் காத்து நின்றார்.


"தம்பி கனகர் மழை பெய்யுது தெரியவில்லையா" என்றார், கனகரின் நீண்ட நாள் நண்பர் கச்சான் வியாபாரி ஐயா.
"வணக்கம் ஐயா, இண்டைக்கு என்ன நேரத்தோட?"
"பள்ளிக்கூடத்தில் விளையாட்டுப் போட்டி"
"இது என்ன சாக்கு மூட்டையில் பெரிசா?"
"கச்சான் இண்டைக்கு கொஞ்சம் கூட யாபாரம் போகும். அதுதான் இரவு இரவாக வறுத்து கொண்டு போறன்"
"கண காலமாச்சு இரண்டு பேரும் சந்திச்சு"
"ஓம் ஐயா"
"எப்படி பிள்கைள் சுகமாக இருக்குதுகள் தானே?"

"நல்ல சுகமாக இருக்குதுகள்"
"உங்கட பேரப்பிள்ளைகள்"
"நல்லா இருக்குதுகள்"
"ஐயா என்ர பிள்ளைகளும் வளந்திருச்சிகள். உங்களை ஒரு வீடு பார்க்க சொன்னனான் என்ன மாதிரி பார்த்தீங்களா?"
"நீதானே அண்டைக்கு ஏதோ மாலதியிண்ட கொட்டகையைத் திருத்திக் கொண்டு இருக்க போறன் என்று சொன்ன மாதிரி கிடக்குது"
"அது கொஞ்கம் காட்டுக்குள்ள இருக்குது"
"சரி பாத்து சொல்றன்"
"என்ர பிள்ளைகள் 'கெம்பஸ்'சுக்குப் போகுதுகள் மகளும் வளந்திட்டாள். இன்னும் கொஞ்ச காலம் வேலை செய்தா போதும்"
"என்ன தம்பி கால் வீங்கியிருக்கு?"
"இந்த கொடிய யுத்தத்திண்ட வேலை"
"என்ன தம்பி கால் வீக்கத்தோட மழையில் நனையிறாய்?"
"மழையில் நனைஞ்சு என்ன ஐயா, நனையாட்டி என்ன ஐயா?"
"இவ்வளவு கஷ்டப்பட்டு அம்மாவை தேடிக்கொண்டிருக்கும் பிள்ளைகளை படிக்க வச்சு வளர்த்துப் போட்டு கடைசி காலத்தில் அதுகளுக்கு துணையாக இருக்கக் கூடாதா?"
"நீங்க சொல்றதும் சரிதான் ஐயா"
"என்ன பார், யாருக்காக இருக்கன்?"
"சீ... சீ... என்ற புத்தி போதலிச்சுப் போச்சு" என்றவாறு கனகர், ஐயா மழைக்கு ஒதுங்கி நின்ற, கடை தாவாறத்தில் ஒதுங்கினார்.
"மாங்குளம், வன்னிவிளான்குளம், அனிஞ்சன்குளம், ஒட்தறுத்தக்குளம், சிவபுரம் போற ஆக்கள் ஓடிவாங்கோ... ஓடிவாங்கோ... மழை காரணத்தால், அடுத்த ஓட்டம் பத்து மணிக்குத்தான். உள்ளுக்கு இடம் இருக்கு ஓடிவாங்கோ... ஏறுங்கோ... ஏறுங்கோ..." என்று, மழைக்கு ஒதுங்கி நின்ற சனக்கூட்டத்தைப் பார்த்ததும் 'மினிபஸ்' நடத்துநர் கொஞ்சம் உற்சாகமாக கூவினான்.
மல்லாவி கடைத்தெருவில் நின்ற அனைவரும் ஓடிச்சென்று 'மினிபஸ்'ஸில் ஏறினார்கள்.

ஐயாவின் கச்சான் மூட்டையை பழக்கதோசத்தில் நடத்துநர் பின் 'டிக்கி'யில் ஏற்றினான்.
'என்னடா இது இண்டைக்கு இப்படி சனமாயிருக்கு. கொஞ்சம் தள்ளி இடம் விடுங்கோ இந்த கிழவனைப் போட்டு மிதிக்காதிங்கோ..' என்று புறுபுறுத்தவாறு ஐயா ஏற, அவரைப் பின் தொடர்ந்து தனது மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு கனகரும் ஏறினார்.

புளி மூட்டைகளை அடுக்குவது போல 'மினி பஸ்'க்குள் ஆக்களைத் தள்ளி ஏற்றினான், நடத்துநர். சனக் கூட்டத்திற்குள் ஐயாவும் கனகரும் ஒருவரை ஒருவர் பிரிந்தனர். ஓர் இளைஞன் ஐயாவைப் பார்த்து விட்டு,
"ஐயா, இந்தாங்க இருங்க" - சொல்லிக் கொண்டு தான் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து எழுந்தான்.
"நல்லா இருப்படா. கொடி புண்ணியம் கிடைக்கும்." என்றவாறு ஐயா அமர்கின்றார். உடனே 'மினி பஸ்'ஸின்' வேகம் குறைகின்றது. அந்த இளைஞன் 'சீ...சீ... என்ன சனங்களடா இடிச்சிக் கொண்டும் ஒரசிக்கொண்டும் நிக்குதுகள்?' என தனக்குள் புறுபுறுத்துக்கொண்டு இறங்கினான்.

'மினி பஸ்' வேகம் கூடுகின்றது. ஐயா, கனகரைத் தேடினார் சன நெரிலுக்குள் அவரால், கண்டுகொள்ள முடியவில்லை. 'அந்த பொடியன் எனக்குப் பாவப்பட்டு இடம் தரவில்லை. அவனுக்கு இறங்கிற இடம் வந்தோன என்னை இருக்க சொல்லிட்டுப் போயிட்டான். அது தானே இந்த கிழவனுக்கு யார் பாவம் பாக்கப் போறாங்க' என சிந்தித்தவாறு தன்னைச் சுற்றி உள்ள ஆசனங்களை நோட்டமிடுகின்றார். அவற்றில் இளம் பெண்களும் ஆடவர்களும் சந்தோஷமாக சிரித்து கதைத்துக்கொண்டிருக்கின்றனர்.




**தொடரும்...**



முன்னாள் மனித உரிமை ஆணையாளரும், சட்டத்தரணியும், மனித உரிமை செயற்பாட்டாளருமான அம்பிகா சற்குணநாதன்

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஏன் ஆபத்தானது?

மார்ச் மாதம் 17 ஆம் திகதி அரசாங்கம் முன்வைத்த பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் தற்பொழுது இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்திலும் பார்க்க மிக மோசமான சட்டம். இந்த சட்டத்திலும் பயங்கரவாதத்திற்கு ஒரு வரைவிலக்கணம் இல்லை. ஏனென்றால் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் இருக்கின்றது. ஆனால் இந்த சட்டத்தில் அதற்கு மாறாக பயங்கரவாதம் என்றால் ஒரு பரந்த வரைவிலக்கணம் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

தற்பொழுது உள்ள சட்டத்தில் **PTA** யில் தடுப்பாணையை பாதுகாப்பு அமைச்சர் தான் கொடுக்கலாம். ஆனால் தற்பொழுது புதிதாக வந்திருக்கும் சட்டத்தில் பிரதி பொலிஸ்மா அதிபர் தடுப்பாணையை கொடுக்கலாம். அந்த தடுப்பாணையில் ஒருவரை முதல் தடவையாக மூன்று மாதத்திற்கு தடுத்து வைக்கலாம் அதன் பின்னரும் தொடர்ந்து தடுத்து வைக்க வேண்டும் என்றால் பொலிஸ் நீதிபதிக்கு இரகசிய அறிக்கையை முன்வைத்து ஒருவரை தடுத்து வைக்குமாறு கேட்கலாம். அதே நேரத்தில் நீதிபதி அந்த அறிக்கையை பார்த்து இவரை தடுத்து வைப்பதற்கான காரணம் இல்லை என்றால் இந்த சட்டம் சொல்லுகின்றது. நீதிபதி கட்டாயமாக பொலிஸிடம் கேட்க வேண்டும் இவரை ரிமான்ட் பண்ணி சிறையில் அடைப்பதற்கு காரணம் இருக்கின்றதா? என்று. அப்படியும் காரணம் இல்லாவிட்டாலும் கூட தடுத்து வைக்கப்பட்டவரை முழுமையாக அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்வதற்கு நீதிபதிக்கு அதிகாரம் இல்லை. அவர் அந்த நபரை பிணையில் மட்டும் தான் அனுப்ப முடியும். எனவே இதுவொரு கேள்வியை எழுப்புகின்றது. ஒருவரை தடுப்பாணையின் கீழ் தடுத்து வைக்க ஆதாரம் இல்லா விட்டால் இவரை ரிமான்ட் பண்ணி சிறையில் தடுத்து வைப்போம் என ஏன் நீதிபதி பொலிஸிடம் கேட்க வேண்டும் என்று. அவ்வாறு கூட தடுத்து வைப்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும் ஏன் நீதிபதி அவரை அந்த வழக்கில் இருந்து விடுவிக்காமல் பிணை மட்டும் கொடுக்க நீதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்று. எனவே எப்படியாவது ஒருவரை சட்டத்தில் அவரை முடக்கி வைப்பதற்கே இந்த சட்டம் எத்தணிப்பதாக தெரிகின்றது. மற்றையது இராணுவ மயமாக்கல் தற்பொழுதுள்ள **PTA** யில் இராணுவத்திற்கு ஒரு அதிகாரமும் இல்லை. ஆனால் புதிய சட்டத்தில் இராணுவம் ஒருவரை கைது செய்யலாம் கைது செய்ததன் பின்பு 24 மணித்தியாலயம் வரை வைத்திருப்பதற்கு இராணுவத்திற்கு உரிமை இருக்கின்றது. அதன் பின்னர் கட்டாயமாக பொலிஸிடம் அவரை கையளிக்க வேண்டும். மற்றும் இராணுவம் வீதியில் வாகனத்தில் உங்களை தடுத்து சோதிக்கலாம். எனவே இது இராணுவமயமாக்கலை சட்டமாக்குகின்றது. இராணுவ மயமாக்கலை ஒரு சர்வ சாதாரணமாக்குவதற்கு தான் அரசாங்கம் எத்தணிப்பதாக தெரிகின்றது.

அடுத்ததாக புதிதாக முன்வைக்கப்பட்ட சட்டமானது ஜனாதிபதிக்கு ஒரு இடத்தை தடை செய்யப்பட்ட இடமாக அவர் ஒரு வர்த்தமானியை பிரசுரித்து தடைப்பட்ட இடமாக ஒரு இடத்தை ஆக்கலாம். அப்படி தடை செய்யப்பட்ட இடம் என்றால் அங்கு ஒருவரும் போக முடியாது. அந்த இடத்தை மேற்பார்வை செய்வதற்காக ஒரு அலுவலகரை நியமித்தால் அவர் அந்த நேரத்தில் முடிவு செய்யலாம் நான் இவரை உள்ளே செல்ல விடுவதா? இல்லையா? என்பதனை. உதாரணமாக கோல்பேசை எடுத்தால் ஜனாதிபதி அந்த இடத்தை தடை செய்யப்பட்ட இடம் என பிரகடனம் செய்தால் அதற்கு பொறுப்பான அதிகாரி அந்த நேரத்தில் முடிவு எடுக்கலாம் நாங்கள் இவரை உள்ளே செல்ல அனுமதிப்பதா? இல்லையா? என்பதனை.

எனவே நீதித்துறை இதில் வந்து மேற்பார்வை செய்வதில்லை எப்படி இந்த முடிவுகளை செய்கின்றார்கள் என்பது வெளிப்படும் தன்மையில்லை இந்த முடிவை அந்த நேரத்தில் இருக்கும் அலுவலகர் தமது விருப்பத்திற்கு ஏற்ப செய்யலாம். அடுத்ததாக ஒரு நிறுவனத்தையோ அல்லது ஒரு குழுவையோ தடை செய்யப்பட்ட குழுவாக ஜனாதிபதி வர்த்தமானியை பிரசுரித்து அவர்கள் தடை செய்யப்பட்ட குழுவாக அவர்களை தடை செய்யலாம். உதாரணமாக ஒரு பல்கலைக்கழகத்தில் இருக்கும் மாணவ சங்கத்தைக்கூட இந்த விதத்தில் செய்யலாம். ஒரு வருடத்திற்கு இந்த குழுவை தடை செய்யலாம். ஆனால் ஒவ்வொரு வருடமும் அதை புதுப்பித்துக்கொண்டே போகலாம். முன்னர் சொன்னது போன்று தடை செய்யப்பட்ட இடமாக இருந்தால் அது 10 அல்லது 20 வருடங்களிற்கு கூட தடை செய்யப்பட்ட இடமாக ஜனாதிபதி வர்த்தமானியில் தடை செய்யப்பட்ட இடமாகவே அதை வைத்திருக்கலாம். அந்த விதத்தில் இந்த சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. எமது அரசியல் அமைப்பில் எமக்கு கொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் பல விடயங்கள் இந்த சட்டத்தில் உள்ளன. சர்வதேச மனித உரிமை சாசனங்களில் உள்ளடக்கப்பட்ட உரிமைகளையும் மீறுகின்ற பல விடயங்கள் இந்த சட்டத்தில் உள்ளன. தற்பொழுது இருக்கும் **PTA** யின் கீழ் மரண தண்டனை இல்லை ஆனால் புதிய சட்டத்தில் கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. நாம் இந்த விடயங்களை பார்த்தோமானால் சர்வதேச மட்டத்திலும் இந்த புதிய சட்டம் கண்டிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சர்வதேச சட்ட வல்லுநர் ஆணையம் கூட இரண்டு நாட்களுக்கு முன்பு அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள் இந்த சட்டத்தில் இப்பொழுது நான் கூறிய விடயங்கள் எல்லாம் பிரச்சனைக்குரிய விடயங்கள் மனித உரிமைகளை மீறுகின்ற விடயங்கள் அது தற்பொழுது இருக்கும் சட்டத்தை நீக்கிவிட்டு இருக்கும் சட்டத்தை விட மிக மோசமான சட்டத்தை தான் அரசாங்கம் கொண்டு வர எத்தணிக்கின்றது என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இப்பொழுது **GSP+** சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக ஒரு நிபந்தனையை அரசாங்கம் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க வேண்டும் நீக்கி சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று ஆனால் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறும் ஒரு சட்டத்தை தான் அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது.

இந்த சட்டத்தில் எமது நாட்டில் **ICCPR** என்ற ஒரு சட்டம் இருக்கின்றது. நடைமுறையில் அந்த சட்டம் எமது குடியியல் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம். ஆனால் நடைமுறையில் கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் அந்த சட்டத்தை ஆயுதமாக்கி எமது உரிமைகளை மீறத் தான் அவர்கள் அதை பாவித்திருக்கின்றார்கள். சக்திக சக் குமார என்னும் எழுத்தாளன் இந்த சட்டத்தின் கீழ் தான் தடுத்து வைக்கப்பட்டார். இந்த சட்டம் என்ன கூறுகின்றது என்றால் ஒரு சமூகத்திற்கு எதிராக ஒரு குழுக்கு எதிராக நீங்கள் வன்மத்தை அல்லது வன்முறையை அல்லது பாராபட்சத்தை தூண்டினால் அது ஒரு குற்றமாகும். தற்பொழுது புதிதாக முன்வைக்கப்பட்ட இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தில் இந்த பிரிவும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு குழுவிற்கு அல்லது ஒரு சமூகத்திற்கு எதிராக வன்மத்தையோ வன்முறையையோ பாராபட்டத்தையும் தூண்டுவதையும் அவர்கள் பயங்கரவாதம் என்றாக்கியிருக்கின்றார்கள் இப்பொழுது முன்வைத்த இந்த சட்டத்தில். இந்த மாதிரியான நோக்கங்களுக்காக சில குற்றங்களை புரிந்தால் அவை பயங்கரவாதமாகும் தற்பொழுது சமய தலத்தையோ அல்லது காலாச்சார தலத்திற்கு ஏதாவது பாதகம் ஏற்படுத்தினால் அது ஒரு குற்றமாகும். உதாரணமாக குருந்தூர் மலையில் இருந்த இந்து ஆலயத்தை தகர்த்தி விட்டு அவர்கள் தற்பொழுது பௌத்த ஆலயத்தை கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு எதிராக பல தடவைகள் அங்குள்ள மக்கள் போராட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள். இந்த சட்டத்தை பாவித்து அவர்கள் கூறலாம் அந்த போராட்டங்கள் அங்கிருக்கும் கலாச்சார சமய தலத்திற்கு பாதகம் விளைவிக்கின்றது. அல்லது அதை ஏதாவது ஒரு விதத்தில் தகர்த்த இவர்கள் முற்படுகின்றார்கள் என குற்றம் கூற முற்படுக்கின்றார் என்று கூறி அதை அவர்கள் செய்வதன் நோக்கம் சிங்கள மக்களுக்கு எதிராக வன்முறையை தூண்டுவதற்காக என கூறி அங்கு போராடும் மக்களை இந்த சட்டத்திற்கு கீழ் கைது செய்வதற்கு வாய்ப்புள்ளது. எனவே இந்த சட்டம் லேசாக துஷ்பிரயோகப்படுத்தக்கூடிய சட்டம். குருந்தூர் மலையில் உள்ள இந்து ஆலயத்தை

> **“ஒரு சமய அல்லது கலாச்சார தலத்திற்கு பங்கம் விளைவித்தால் அது குற்றமாகும். அதை நீங்கள் ஒரு இனத்திற்கு எதிராக வன்முறையை தூண்டுவதற்காகத் தான் செய்கின்றீர்கள் என்றால் அது பயங்கரவாதமாகும்”**

அவர்கள் தரை மட்டமாக்கிவிட்டு அவர்கள் பௌத்த ஆலயத்தை இராணுவத்தின் உதவியோடு தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் உதவியோடு அவர்கள் கட்டிட வேலையில் ஈடுபடுகின்றார்கள். தற்பொழுது அதற்கு எதிராக போராடும் அங்கிருக்கும் மக்களை இந்த சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஏனென்றால் அவர் நடத்தும் போராட்டம் இந்த சட்டத்தின் கீழ் சொல்லப்பட்டிருக்கின்றது. "ஒரு சமய அல்லது கலாச்சார தலத்திற்கு பங்கம் விளைவித்தால் அது குற்றமாகும். அதை நீங்கள் ஒரு இனத்திற்கு எதிராக வன்முறையை தூண்டுவதற்காகத் தான் செய்கின்றீர்கள் என்றால் அது பயங்கரவாதமாகும்" என்று தான் இந்த சட்டம் கூறுகின்றது. எனவே அரசாங்கம் கூறலாம் போராடும் மக்கள் இந்த கலாச்சார சமய தலத்திற்கு பாதகம் விளைவிக்கின்றனர் அவர்கள் இதை தரைமட்டமாக்குவதற்கோ அல்லது இதை அழிப்பதற்கோ எத்தணிக்கின்றார்கள். இவர்கள் இதை செய்வதன் நோக்கம் சிங்கள மக்களுக்கு எதிராக வன்முறையை தூண்டுவதற்காக என்று அவர்கள் கூறினால் இந்த புது சட்டத்தின்படி அது ஒரு பயங்கரவாத குற்றமாகும். எனவே அவர்கள் இந்த சட்டத்தை பாவித்து அதற்கு எதிராக போராடும் மக்களை கூட கைது செய்ய வாய்ப்புள்ளது. புதிதாக முன்வைக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் நல்லாட்சி காலத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டுவந்தார்கள். அந்த சட்டத்தில் உள்ள பல விடயங்களைத் தான் இந்த சட்டத்திலும் உள்ளடக்கியிருக்கின்றார்கள். அந்த நேரத்தில் 2018 இல் நல்லாட்சி அரசாங்கம் அந்த சட்டத்தையும் கொண்டு வந்த பொழுது பலர் அதற்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கின்பின் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பில் சில பரிந்துரைகளை முன்வைத்தார்கள். அதாவது எமது அரசியலமைப்பிற்கு ஏற்ப இந்த சட்டம் இருக்க வேண்டும் என்றால் அரசாங்கம் என்ன மாற்றங்களை இந்த சட்டத்திற்கு செய்ய வேண்டும் என்று. இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான புதிய சட்டத்தில் அவர்கள் யாழ்ப்பாண நல்லாட்சி காலத்தில் இருந்த **CTA** 80 வீதம் என்று சொல்லலாம் அது இருக்கின்றது. அதற்கு பின் உச்ச நீதிமன்றம் கொடுத்த பரிந்துரைகள் அதுவும் இதில் இருக்கின்றது. எனவே இதில் எத்தனையோ பாதுகாப்புக்கள் இருப்பது போன்று தான் தெரிகின்றது.

ஆனால் நாங்கள் இந்த சட்டத்தை நுணுக்கமாக பார்த்தால் அதில் இருக்கும் பிரச்சனைகள் அதாவது நீதிபதி மேற்பார்வை செய்யக்கூடியவாறு இருக்கின்றது. ஆனால் உண்மையில் நீதிபதியின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன அவருக்கு அதிகாரம் அவ்வளவாக இல்லை. மற்றும் ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இவர்கள் இந்த சட்டத்தை இ.யற்றும் பொழுது உச்ச நீதிமன்றம் என்ன கூறியது என்பது தொடர்பில் கவனம் செலுத்தி பரிந்துரைகளையும் உள்ளடக்கியிருக்கின்றார்கள். ஆனால் பரிந்துரைகள் உள்ளடக்கியும் இருந்தாலும் கூட இது சர்வதேச சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை சாசனங்கள் முக்கியமாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு இருக்கும் கடமைகள் மனித உரிமைகள் பாதுகாப்பதற்காக மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக இருக்கும் கடமைகளுக்கு எதிராகத் தான் இந்த சட்டம் உள்ளது. இலங்கையில் தற்பொழுது இரண்டு தருணங்களில் தான் இராணுவத்திற்கு பொலிஸாரின் அடையாளங்கள் கொடுக்கப்படுகின்றது. ஒன்று எமது பொதுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஜனாதிபதி ஒரு அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி அந்த அவசரகால நிலைமைக்கு கீழ் அவசரகால விதிமுறைகளை அவர் வெளியிட வேண்டும். அதற்கு கீழ் தான் இராணுவத்திற்கு பொலிஸாரின் அதிகாரங்கள் அதாவது கைது செய்வதற்கு தடுத்து வைப்பதற்கான அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றது. அல்லது இரண்டாவது தருணம் எமது பொதுப்பாதுகாப்பு சட்டத்தில் ஜனாதிபதிக்கு பிரிவு 12 இன் கீழ் ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னவென்றால் ஒவ்வொரு மாதமும் அவர் ஒரு வர்த்தமானியை பிரசுரிக்கலாம் இராணுவத்தை சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டுவதற்காக இராணுவத்தை பாவிப்பதற்கு அது அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்துவதையும் பார்க்க மிக மோசமானதாகும். ஏனென்றால் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தினால் பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டும் பாராளுமன்றத்தில் வாக்களிக்க வேண்டும். ஆனால் இந்த பிரிவு 12 இன் கீழ் இருக்கும் அதிகாரம் அதாவது ஒவ்வொரு மாதமும் ஒரு வர்த்தமானியை பிரசுரித்து இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரங்கள் கொடுப்பது மிகவும் பயங்கரமான விடயம். அதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவி ஏற்ற காலத்தில் இருந்து செய்து கொண்டே தான் இருக்கின்றார். அதற்கு முன்னர் கோட்டபாய ராஜபக்சவும் பதவியேற்ற காலத்தில் இருந்து செய்தவர். அதற்கு முன் மைத்திரிபால சிறிசேன கூட ஈஸ்டர் குண்டுத்தாக்குதலிற்கு பின்னர் இந்த பிரிவு 12 ஐ பாவித்து ஒவ்வொரு மாதமும் இராணுவத்திற்கு இந்த அதிகாரத்தை கொடுத்தார் அதற்கு முன் மகிந்த ராஜபக்ச கூட இரண்டு வருடங்களுக்கு இதை செய்தார். அதற்கு முன் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கூட இதைப்பாவித்து சில காலங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வர்த்தமானியை பிரசுரித்து இராணுவத்திற்கு பொலிஸாரின் அதிகாரங்களை கொடுத்தனர். ஆனால் தற்பொழுது இந்த புதிய சட்டத்தில் அவர்கள் எதை எத்தணிக்கின்றார்கள் என்றால் இந்த மாதிரியாக செய்யாமல் அதை நிரந்தரமாக்குவதற்கு அதை சட்டமாக்குவதற்கு அதை சர்வ சாதாரணமாக்குவதற்கு அவர்கள் இந்த புதிய சட்டத்தின் ஊடாக செய்ய எத்தணிக்கின்றார்கள்.

# ஈஸ்டர் குண்டுதாக்குதல் போன்று சிவசேன அமைப்பு யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கின்றதா?




கடந்த நாட்களிலே யாழ்ப்பாண தொகுதியிலே விசேடமாக கிறிஸ்தவ ஆலங்களுக்கு விரோதமாகவும். கிறிஸ்தவ கூட்டங்களுக்கு விரோதமாகவும். தனிப்பட்ட கிறிஸ்தவ போதகர்களுக்கு விரோதமாகவும் இந்து அமைப்புக்கள். இந்து மதவாதிகள் சிவசேன அமைப்பு குழுக்கள் விரோதமாக செயற்பட்டுக்கொண்டு வருகின்றார்கள். ஜனநாயகமாக இந்த இலங்கை தேசத்திலே மத சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. அதை நாங்கள் அனைவரும் அறிந்தவொரு விடயம். எந்த கிறிஸ்தவர்களும் எந்த மதத்திற்கும் விரோதமாக செயற்பட்டதாக சரித்திரம் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே விசேடமாக யாழ்ப்பாண தேசத்தில் இந்து மக்களும். கிறிஸ்தவ மக்களும் சமாதானமாக அன்பாக பல வருடங்களாக நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். கிறிஸ்தவ சமயம் அல்லது கிறிஸ்தவ மார்க்கம் கிறிஸ்தவ செயல் இவை எல்லாம் சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதல்ல. வெள்ளகாரர்கள் மிஷநெறியாக இந்த நாட்டிற்கு வரும் பொழுது அந்த நாட்களிலேயே இங்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்கப்பட்டது. ஆங்கிலத்தை கொடுத்தார்கள். நல்ல பாடசாலைகளை உருவாக்கினார்கள். நல்ல மார்க்கத்தை சொல்லிக்கொடுத்தார்கள் அன்றிலிருந்து இன்று வரை அதிலிருந்து நாங்கள் நன்மைகளை பெற்றுக்கொண்டிருக்கின்றோம். எனக்கு புரியாத விடயம் என்னவென்றால் ஏன் இந்த இந்து அமைப்புக்கள். சிவசேனையை போன்ற ஒரு சில இந்து தலைவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு இவ்வளவு விரோதமாக செயற்படுகின்றார்கள். அவர்களுக்கு இதில் என்ன இலாபம். ஒருவேளை சிவசேனைக்கு தெரியாமல் இருக்கலாம் அவர்களுக்கு பின்புலத்தில் யார் இருக்கின்றார்கள். அவர்கள் யாரின் தூண்டுதலினால் செயற்படுகின்றார்கள். அவர்களுக்கு பணம் எங்கிருந்து வருகின்றது. அவர்களுக்கு பின்பு இருக்கின்ற அரசியல் பலம் என்ன இது எல்லாமே நமக்கு தெரியும். கிறிஸ்தவர்கள் நாங்கள் சமாதானத்தையும். ஐக்கியத்தையும். அன்பையும் விரும்புபவர்கள். அதனால் மிகவும் பொறுமையாக எல்லாவற்றையும் இந்த வானத்தையும் பூமியையும் உருவாக்கின கடவுளாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி நாங்கள் பொறுமையாக வாழ்ந்து வருகின்றோம். ஆனாலும் சூழ்நிலை சற்று வித்தியாசமாக காணப்படுகின்றதனால் இவைகள் குறித்து நாம் கதைக்க வேண்டிய சூழ்நிலைக்கு வந்திருக்கின்றோம்.

இலங்கை யாப்பின்படி நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரத்திற்கு விரோதமாக செயற்படுவதற்கு சிவசேனாவுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?. என்னுடைய கேள்வி அதுதான். இவர்கள் எந்த சட்டத்திற்கு கீழே இவ்வாறு செய்கின்றார்கள். இவர்களுக்கு எந்த சட்ட அமைப்பு சொல்லிக்கொடுத்திருக்கின்றார்கள் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக செயற்படுங்கள் என்று?. அதை அவர்கள் எனக்கு காட்டினால் நான் அமைதியாக இருப்பேன். நாங்கள் ஒருவரும் ஒருநாளும் ஒருபோதும் எந்த இடத்திலும் மற்றைய மதங்களுக்கு விரோதமாக செயற்பட்டவர்கள் அல்ல அது அனைவருக்கும் தெரியும். நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய மிக கவலைக்குரிய விடயம் என்னவென்றால் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து நான்கு வருடங்கள். அதற்கு பின் அரசாங்கம் இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். ஐஎஸ் ஐஎஸ் இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். வேறு தலைவர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள் அதற்கு இதுவரையிலும் எந்த வெளிச்சமும் இல்லை. 225 பேர் மறைந்துபோனார்கள் சிலர் இன்றும் கண் தெரியாமல் கை கால்கள் இல்லாமலும் வாழுகின்றார்கள் கிறிஸ்தவர்கள். இவர்களுக்கு நியாயமும் நீதியும் இந்த அரசாங்கமோ அரசாங்கத்திற்கு உரியவர்களோ அன்று ஆட்சியில் இருக்கின்றவர்களோ இன்று ஆட்சியில் இருக்கின்றவர்களோ செய்யவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் நான் சிந்திக்கின்றேன் மிகவும் கவனமாக இருக்கின்றேன். யாழிலும் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு விரோதமான ஒரு தாக்குதல் இந்து அமைப்புக்கள் இந்து மக்களுடைய அன்பையும் கெடுக்கின்ற சிவசேனாவை போன்ற அமைப்புக்கள் செய்யக்கூடும். அல்லது அவர்களுக்கு ஊடாக சிலர் அதை தூண்டிவிட்டு எமது கிறிஸ்தவத்திற்கு விரோதமாக செயற்பட்டது போன்று செய்யலாம். சமீப நாட்களாக கொழும்பிலே பொதுபலசேன என சொல்லி சில பிக்குமார்கள் சேர்ந்து முஸ்லிம்களுக்கும். கிறிஸ்தவர்களுக்கும் விரோதமாக செயற்பட்டு செயற்பட்டு நின்றால் குற்றம். சாப்பிட்டால் குற்றம். கதைத்தால் குற்றம். கூட்டம் வைத்தால் குற்றம் இவ்வாறெல்லாம் செயற்பட்டு இறுதியில் அதை நிறுத்திவிட்டார்கள். அங்கே பொதுபலசேன யாழில் சிவசேனா. இந்த சிவசேனாவின் குழுவிடம் நான் கேட்பது என்னவென்றால் அவர்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள். ஒரு யுத்தத்தை எதிர்பார்க்கின்றார்களா? அல்லது இரத்த ஆறு ஓட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்களா? ஏற்கனவே 30 வருட யுத்தத்தில் எமது மக்கள் கஷ்டப்பட்டு. பாடுபட்டு. துன்பப்பட்டு. வேதனைப்பட்டு உயிரிழந்து இன்றும் மிகவும் கஷ்டத்துடன் வாழுகின்றார்கள். யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாண மக்களையும் நேசித்து தன்னுடைய மதத்தையும் நேசித்து அவர்களை கவனிக்க வேண்டுமென்றால் சிவசேனவிற்கு நிறைய காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றது. எத்தனை இலங்கையர்கள் இன்று போதை வஸ்துவிற்கு அடிமைப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் அதற்கு குரல் கொடுத்தார்களா?. எத்தனை பேர் கூரை இல்லாமல் மலசலகூடம் வசதி இல்லாமல் வீதிகள் வசதியில்லாமல் ஒருவேளை சாப்பாடு இல்லாமல் எத்தனை பேர் வாழுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்தவர்கள் நாங்கள் இயேசுவினுடைய அன்பை அறிந்ததன் நிமித்தம் அவர்களுக்கு உதவி செய்கின்றோம். இந்த உதவியை இவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் பொருளை கொடுத்து. பணத்தை கொடுத்து. அரிசி. மாவை கொடுத்து மதம் மாற்றுகின்றார்கள். ஒருவரையும் ஒருவராலும் மதமாற்றமுடியாது.

ஆனால் இலங்கை யாப்பின்படி மனித உரிமை சங்கத்தின் யாப்பின்படி ஒரு மனிதனுக்கு உரிமை உண்டு அவனால் முடியும் அவன் நம்புகின்ற ஒரு கடவுளை மதத்தை ஏற்றுக்கொள்ள. சமீப நாட்களிலே **“இந்தியாவில் மதம் மாற்றத்தை செய்வதை தடை செய்யுமாறு உச்ச நீதிமன்றில் வழக்கு தொடுத்தார்கள். அந்த நீதிபதிகள் என்ன சொன்னார்கள் ஒருவருக்கு 18 வயது வந்த பின்னர் அவர் சுயமாக சிந்தித்து அவன் நேசிக்கின்ற விரும்புகின்ற நம்புகின்ற நல்லம் என்று நினைக்கின்ற எந்த மதத்தையும் அவன் ஏற்றுக்கொள்ளலாம்.”** இதுவொரு நல்ல தீர்மானம். இலங்கையிலும் அப்படியொரு தீர்மானம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை ஏற்கனவே இலங்கை யாப்பிலே நாம் விரும்பும் மதத்திற்கு மாறிக்கொள்ளலாம் என்று இருக்கின்றது. அது அனைவருக்கும் புரியவில்லை தெரிந்துகொள்ளவில்லை. எனவே யாழில் இப்படியான சூழ்நிலை குறித்து நான் மிகவும் கவலைப்படுகின்றேன். இலங்கை கிறிஸ்தவ போதக சங்கத்தின் வடக்கு கிழக்கு தலைவராகிய நான் சிவசேனவினுடைய இந்த அடாவடித்தனமான காரியத்தை வன்மையாக கண்டிக்கின்றேன். அதைப் போல் சில பத்திரிகைகள் இவர்களுக்கு உதவி செய்கின்றார்கள் சில தோற்றுப்போன பல்லு பிடுங்கிய பாம்பைப் போல் இருக்கின்ற அரசியல்வாதிகள் உதவி செய்கின்றார்கள். ஏதாவது ஒரு குழப்பத்தை கிறிஸ்தவர்களுக்கு செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் நாங்களும் அவர்களைப் போலவே எமக்கும் எல்லா சுதந்திரமும் இந்த தேசத்தில் உள்ளது. யாழில் திரும்பும் பக்கம் எல்லாம் பிரமாண்டமான கோவில்கள் உண்டு அதற்கு நாங்கள் எதுவும் சொல்லவுமில்லை சொல்லவும் மாட்டோம் அதற்கான அவசியமும் இல்லை. ஆனால் கிறிஸ்தவர்கள் எங்கையாவது ஒரு மூளையில் சிறிய நான்கு சுவர்களை கட்டி ஒரு கூரையை போட்டால் போதும் அது பத்திரிகையில் பெரிய தலைப்பாக வந்துவிடும் சமீபத்திலும் அப்படி ஒரு செய்தி வந்தது. அவர்கள் விரோதமாக தவறாக செய்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் அதை நாம் ஓம் என்று சொல்லலாம் அப்படியான சம்பவத்தை இவர்கள் ஏன் உசுப்பேத்திக்காட்டுகின்றார்கள். ஒவ்வொரு உயிர்த்த ஞாயிறுகளிலும் இவர்கள் இப்படியான பிரச்சனைகளை உருவாக்குகின்றார்கள். பெரிய வெள்ளியை கொண்டாட முடியாது. உயிர்த்த ஞாயிறை கொண்டாட முடியாது இந்தியாவில் இருந்து கடந்த வாரம் ஒரு போதகர் வந்தார் அவருக்கு எதிராக பாரிய ஒரு ஆர்ப்பாட்டம். மதம் மாற்றுபவர்கள் உள்ளே வரவேண்டாம் எனக்கூறி எல்லாரும் சுவர்களில் ஒட்டினார்கள். அவர்களுக்கு தெரிகின்றது. இந்தியாவில் யார் உதவி செய்கின்றார்கள். அந்த அமைப்பின் பெயர் என்ன அங்கே பணம் கொடுக்கப்படுகின்றது. இவர்கள் இங்கே இறுமுகின்றார்கள். தும்முகின்றார்கள். இது தன்னுடைய மக்களுக்கு உரித்தான பக்தியும் வைராக்கியமும் அப்படி நான் காணவில்லை. அப்படி சிவசேனாவுக்கு இந்த மக்களை குறித்து இருக்குமானால் யாழில் செய்ய வேண்டிய காரியங்கள் பல உண்டு. மருத்துவம் இல்லாமல் பலர் இருக்கின்றார்கள். வீடுவாசல் இல்லாமல் பலர் இருக்கின்றார்கள். சாப்பாடு இல்லாமல் இருக்கின்றார்கள். வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கின்றார்கள். போதைவஸ்துக்கு அனுதினமும் அடிமையாக இருக்கின்றார்கள். ஏன் இந்த இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணத்தை கூறு போட்டு விற்கப்போகின்றார்கள் அதையெல்லாம் நிறுத்துங்கள் இந்த பூமியில் உங்களுக்கு ஒரு அக்கறை இருக்குமானால். அடுத்தது நான் ஒன்றை கேட்க விரும்புகின்றேன் எந்த எழுத்திலே சொல்லுகின்றார்கள். இது சிவபூமி என்று. எந்த எழுத்தில் சொல்லுகின்றார்கள் இது சிவபூமிக்கு சொந்தம் என்று. நான் நினைப்பது என்னவென்றால் இலங்கையில் நூற்றுக்கு எழுபத்தெட்டு வீதம் வாழுகின்ற சிங்களவர்கள் அவர்கள் பெரும்பான்மையினர். அவர்கள் சிறுபான்மையான எங்களைத் தான் எப்பொழுதும் ஏதாவது ஒன்று செய்ய முற்படுவார்கள்.

அதே போல் யாழில் விசேடமாக கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினர் ஆனால் யாழில் இருக்கின்ற அரசியல்வாதிகள் மறக்கக்கூடாது வடக்கு கிழக்கிலே கிறிஸ்தவ வாக்கு ஒரு இலட்சத்திற்கு மேலே இருக்கின்றது. எனவே அந்த கிறிஸ்தவர்கள் வாக்களிப்பது யாருக்கு. இந்து தலைவர்களுக்கு தான் வாக்களிக்கின்றார்கள். நான் கிறிஸ்தவர்களிடத்திலே கேட்டுக்கொள்ளுகின்றேன். விசேடமாக கிறிஸ்தவ மதத்திற்கும் கிறிஸ்தவ காரியங்களுக்கும் விரோதமாக நிற்கின்ற அரசியல்வாதிகளுக்கு இனி கிறிஸ்தவர்கள் வாக்களிக்கக்கூடாது. அதைப்போன்று கிறிஸ்தவர்கள் குறித்து தவறாக பிழையாக தேவையில்லாமல் தங்களது நன்மைக்காக எழுதுகின்ற சில பத்திரிகைகள் இருக்கின்றன. அந்த பத்திரிகைகள் வாங்கக்கூடாது ஏன் அவர்கள் குழப்பத்தை உருவாக்குகின்றார்கள் என்று சொல்லவிரும்புகின்றார்கள். எனவே அருமையான என்னுடைய இந்த செய்திகளை கேட்டுக்கொண்டிருக்கின்ற விசேடமாக இந்த யாழ்ப்பாண தேசத்தில் எமது ஆளுநர். **DIG, SSP,** அரசியலில் இருக்கின்ற பெரியவர்கள் அனைவரும் கவனத்தில் செலுத்த வேண்டும். இவ்வாறான சிறிய சிறிய காரியங்களை செய்யாவிட்டால் நாளை ஒரு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் யாழிலே வரலாம். இது எனக்குள்ள ஒரு சந்தேகம். இவர்கள் இன்று சபைகளுக்கு கை வைத்திருக்கின்றார்கள். சிறிது காலம் போகவிட்டு இவர்கள் கத்தோலிக்கர்களையும் ஒருவழி பண்ணுவார்கள். எனவே இங்கிருக்கும் இந்து மக்களை நாம் நேசிப்போம். அவர்களது வழிபாடுகள். அவர்களது செயற்பாடுகளை நாம் மதிக்கின்றோம். அதற்கும் எமக்கும் எந்தவிதமான பிரச்சனைகளும் கிடையாது. அது அவர்களது சுதந்திரம் கிறிஸ்தவ சுதந்திரத்திற்கு விரோதமாக செயற்பட வேண்டாம். கிறிஸ்தவ சபைகளுக்கு விரோதமாக சும்மா பத்திரிகைகளில் செய்திகளில் கண்டதெல்லாம் எழுத வேண்டாம் அதற்கு அவசியமில்லை.

இந்த இலங்கை தேசம் குட்டிச்சுவராக போனதற்கு காரணம் என்ன? மதப்பிரச்சனை. ஜாதி பிரச்சனை. சிங்கள தமிழ் பிரச்சனை இவைகள் தான். நான் அடிக்கடி யூரோப் நாடுகளுக்கு போய் வருகின்ற ஒருவர் சுவீஸ். பிரான்ஸ். ஜேர்மன். அமெரிக்கா. லண்டன். கனடா எல்லாவற்றிற்கும் போய் வாரன். எல்லா இடங்களிலும் பிரமாண்டமான இந்து கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கின்ற ஒரு கிறிஸ்தவனாவது. ஒரு வெள்ளக்காரனாவது நீ தஞ்சம் கேட்டு அகதியாக வந்தவன் அமைதியாக இரு இது கிறிஸ்தவ நாடு இந்து கோவில்களை கட்டாதே என்று சொன்னார்களா? சுவிஸிலே இந்து கோவிலில் தேர் இழுக்கின்ற பொழுது அங்கு சில வீதிகளை வாகனங்கள் பயணிப்பதற்கு தடைவிதித்து கொடுக்கின்றார்கள். சுவிஸ் பொலிஸ். அவர்கள் படித்த மனிதர்கள். அவர்கள் மற்றைய மதத்தினை மதிக்கத் தெரிந்தவர்கள். மற்றைய மத்திற்காக தங்களது அன்பை வெளிப்படுத்துபவர்கள் கிறிஸ்தவர்கள். சுவிஸிலே பிரமாண்டமான சிவன் கோவிலை கட்டியிருக்கின்றார்கள். சிவன் என்றால் அன்பு. ஆனால் இவர்கள் அன்பையா காட்டுகின்றார்கள்? அந்த அன்பை காணவில்லை. இவர்கள் மதவாதிகள் மதத்தின் பெயரை வைத்துக்கொண்டு தங்களது இலாபத்திற்காக ஏதாவது ஒரு காரியத்தை செய்துகொண்டே இருக்க வேண்டும். தொடர்ந்து மூன்று நான்கு வருடங்களாக இது போய்க்கொண்டே இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு பத்திரிகையிலே ஒரு போதகரை குறித்து 21 முறை எழுதியிருக்கின்றார்கள். இவ்வளவு கிறிஸ்தவ மதத்தை குறித்து அவர்களுக்கு இருக்கின்ற ஒரு வைராக்கியமா? கோபமா? அது என்னவென்று எனக்கு சொல்லத் தெரியவில்லை. நான் கொழும்பில் இருந்து முச்சக்கரவண்டி ஒன்றில் வருகின்ற பொழுது அவர் சொன்னார் ஐயா நீங்கள் நினைப்பது போன்றதல்ல யாழ்ப்பாண தேசம் படு மோசம் என்றார். ஏன் அவ்வாறு சொல்லுகின்றீர்கள் என்று கேட்டேன் இரண்டு பேர் முச்சக்கர வண்டியில் வந்தார்கள் நன்றாக கதைத்தார்கள் இடையிலே பழக்கலவை எல்லாம் வேண்டிக்கொடுத்தார்கள். திடீரென என்ன செய்தார்கள் மயக்க மருந்தை கொடுத்து விரல்களில் இருந்த இரண்டு மோதிரங்களையும் 10 ஆயிரம் ரூபாய் பணத்தையும் களவு எடுத்துவிட்டார்கள் இதுதான் இன்று யாழ்ப்பாணத்தின் நிலைமை. நூறு வாலிபர்களை எடுத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட அதில் 45. 50 பேர் வரை அங்கு போதைவஸ்துக்கு அடிமையாகியிருக்கின்றார்கள். போதை எங்கிருந்து வருகின்றது அதை யார் விற்கின்றார்கள் என்பது குறித்து அதைப்பற்றி யாருக்கும் கவலை கிடையாது. சமுதாயம் குறித்து அக்கறை கொண்டவர்கள் இவ்வாறான குழுக்கள் இவைகள் பற்றி கவலைப்பட்டால் அது நல்லது.

எனவே மிகவும் தெளிவாக திட்டமாக சிவசேனா போன்ற குழுக்களிடம் நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால் கிறிஸ்தவர்கள் மீதான விரோதமாக உங்களது செயலை பேச்சை தயவு செய்து இத்தோடு நிறுத்துங்கள். எமக்கும் சட்டம் தெரியும் எம்மிடத்திலும் சட்டத் தரணிகள் இருக்கின்றார்கள் தேவைப்பட்டால் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால் நாங்கள் அவை எல்லாம் தேவையில்லை அவன் அவன் மூன்று வேளைகள் சாப்பிடுவதற்கே கஷ்டமாக இருக்கின்றது. இந்த நாட்டில் அப்படி இருக்கின்ற பொழுது இவை எல்லாம் தேவையில்லாத பிரச்சனை என்று நினைத்து ஒதுங்கியிருக்கின்றோம். ஆனால் சும்மா சும்மா சுரண்டிப்பார்க்கக் கூடாது. இந்த விளையாட்டை எல்லாம் இனி நிறுத்திவிட வேண்டும். சிவசேனை நினைத்து விட்டார்கள் தாங்கள் ஏதோ பெரிதாக இங்கு கட்டி ஆளப்போகின்றோம் என்று. மட்டக்களப்பில் பிரச்சனை. திருகோணமலையில் பிரச்சனை. யாழில் பிரச்சனை. அப்படி எதுவும் இல்லை சிவசேனா யார் என்பது எங்களுக்கு தெரியும். அதை சொல்ல வேண்டிய நேரம் ஒன்று எங்களுக்கு வந்தது அதனால் நாங்கள் பேசுகின்றோம். எனக்கு விருப்பம் அவரை ஒருநாள் சந்தித்து கதைப்பதற்கு. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே தான் நாங்கள் இன்று இந்த ஊடக சந்திப்பை மேற்கொண்டோம்.

# தமிழ் தரப்பு அரசுக்கு எதிரான போராட்டங்களை வலுவாக முன்னெடுக்க வேண்டும்



அரச ஓட்டுண்ணிகளாக செயற்படுகின்றவர்களை நாம் என்ன செய்யலாம் என்பது பற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு. தமிழ் தேசிய மக்கள் முன்னணி அல்லது ரெலோ. புளொட். ஈபிஆர்எல்எப் போன்ற கட்சிகள் சிந்தித்து செயற்பட வேண்டும். ஏனென்றால் இன்று அரச கைக்கூலிகளாக பிள்ளையான். கருணா. டக்ளஸ் தேவானந்தா. வியாழேந்திரன். அங்கஜன் இராமநாதன் போன்றவர்களை அரசாங்கம் தம்வசம் வைத்திருக்கின்றது. அது மட்டுமல்லாது பல முஸ்லிம் அரசியல் தலைமைகளையும் அவர்கள் தம்வசம் வைத்திருக்கின்றார்கள். ஆகவே இவ்வாறு வைத்துக்கொண்டு உலக நாடுகளுக்கு எம் பக்கம் அரச தரப்பு இருக்கின்றது இந்த ஆயுத கட்சிகள் இருக்கின்றார்கள். எனவே அவர்கள் சரியான ஒரு பாதையில் பயணிக்கின்றார்கள் என்பதனை சர்வதேச ரீதியாக இவர்கள் காண்பிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

தற்பொழுது தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை எனக் கூறிக்கொண்டிருக்கின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பு. தமிழரசுக் கட்சி போன்றவற்றில் இருக்கின்றவர்கள் இதற்கு எதிராக என்ன நடவடிக்கைகளை இதுவரையில் எதிர்கொண்டிருக்கின்றீர்கள். ஒட்டு குழுக்கள் என்ன நடவடிக்கையை செய்கின்றார்கள் என்பது பற்றி நீங்கள் பார்த்தது உண்டா. இவர்கள் உண்மையிலே மதவாதம். இனவாதம். ஜாதிவாதம் போன்ற கலவரத்தின் பின்னணியிலே பார்த்தால் இவர்கள் தான் இருக்கின்றார்கள். இன்று சிவசேனையினுடைய தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயா அவர்கள் மத மாற்றம் முற்றாக தடை செய்யப்பட வேண்டும் என்றவொரு விடயத்தை முன்வைக்கின்றார். அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இங்கிருக்கின்ற மத சுதந்திரம் இங்கு இருக்கத்தான் செய்கின்றது அவர்கள் அதனை கடைப்பிடிக்கலாம் அவர்களது ஆலயங்களுக்கு சென்று வழிபடலாம் என்ற அவரது தனிப்பட்ட கருத்தை கூறுகின்றார். மன்னார் சிவபூமி அல்ல என்று கிறிஸ்தவர்கள். மன்னார் மறைமாவட்ட ஆயர் கூறும் அந்த பாணியை இவர் வெறுக்கின்றார். மன்னார் சிவபூமி என்ற புத்தகத்தை கூட மறவன் புலவு சச்சிதானந்தன் எழுதியிருக்கின்றார். உண்மையில் அது வரவேற்கத்தக்க விடயம். இன்று மத பிரச்சனையை வைத்து வெடுக்குநாறி பிரச்சனை குறுந்தூர் மலை பிரச்சனை எல்லாவற்றையும் அடிப்படையாகக்கொண்டு அரசாங்கம் திசை திருப்பும் நோக்கிலே இனப்படுகொலை மூடி மறைப்பதற்காக அரசாங்கம் திட்டமிட்ட முறையில் செயற்படுகின்றது. இன்னொரு பக்கத்திலே ஜாதிவாதத்தை தூண்டி விடுகின்றது. ஜாதிவாதத்தை பொறுத்த வரையிலே யாழ்ப்பாணத்தில் அந்த ஜாதிவாதத்தை ஒழிக்க முடியும் என யாரும் கனவு கொள்ளக்கூடாது ஏனென்றால் அது நடைமுறை சாத்தியமல்ல.


தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் கூட யாழில் ஜாதிவாதத்தை ஒழிக்க முடியவில்லை. அங்கு தமிழ் செல்வன் அவர்கள் ஆலயத்திற்கு சென்ற பொழுதும் கூட அந்த பிரச்சனை ஏற்பட்டது. விளையாட்டுத்துறை பொறுப்பாளராக இருந்த பாப்பா என்பவர் சென்ற பொழுதும் பிரச்சனை உருவானது. கைதடியில் அப்பன் என்ற சிறந்தவொரு வீரன் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் வீரச்சாவை அடைந்தவர் அவர் எல்லோருடனும் நன்றாகப் பழகக்கூடிய ஒருவர். அவர் கூட இறுதியில் இங்கு ஜாதியவாதத்தை ஒழிக்கமுடியாது என்று கூறினார். இப்படி பலர் இருந்தார்கள் அவர்கள் கூட அந்த காலகட்டத்தில் இவற்றை எல்லாம் விட்டுவிட்டு நாம் நேரடியாக செயற்படுவோம் என்ற விடயத்தை குறிப்பிட்டிருந்தனர். அதன் பின்னர் அங்கு ஜாதிவாத பிரச்சனை இருக்க வில்லை. ஆனால் இதையொரு பொருட்டாக தற்பொழுது கையில் எடுத்துக்கொண்டு அதாவது இனப்படுகொலைக்கான தீர்வு அல்லது இந்த நாட்டில் ஒரு போர்க் குற்றம் இடம்பெற்றது அந்த போர்க்குற்றத்தை திசை திருப்புகின்ற நடைமுறைகளை தான் இந்த அரச புலனாய்வாளர்கள் அல்லது அரசாங்கத்துடன் ஒட்டுண்ணிகளாக செயற்படுபவர்களின் கையில் இந்த அதிகாரங்கள் வழங்கப்படுகின்றது அவர்களின் ஊதியம் அது தான். இன்று தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என பேசிக்கொண்டிருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு சில போராட்டங்களிலே கலந்து கொள்வதில்லை. அதற்கு அவர்கள் காரணத்தை சொல்லுகின்றார்கள். அவர்கள் அரச தரப்புடன் சேர்ந்து செயற்படுவதாக வேறு சிலர் வர்ணித்து கூறுகின்றார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயற்படுகின்றது என்று. எது எவ்வாறிருப்பினும் தமிழர்களின் பிரச்சனையில் வட கிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்பட வேண்டும் அதற்கான வழிமுறைகள் என்ன?. அபகரிக்கப்படுகின்ற காணிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் அதற்கான வழிகள் என்ன?. புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருகின்றன அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கான வழிகள் என்ன?. பயங்கரவாத தடைச்சட்டம் என்ற போர்வையிலே அப்பாவி பொது மக்கள் கைது செய்யப்படுகின்றார்கள் கைது செய்யப்பட்டு போராட்டம் நடத்துபவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்திலே தடுத்து வைக்கப்படுகின்றார்கள் இதற்கான முடிவுகள் என்ன? இன்று வட மாகாண சபை அப்படியே நீர்த்துப்போயிருக்கின்றது உள்ளூராட்சிமன்ற தேர்தல் நீர்த்துப்போயிருக்கின்றது. இவற்றைக் கொண்டு வடக்கு கிழக்கிலே தமிழ் மக்களுக்கான ஒரு அதிகாரத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைகள் என்ன? என்பது பற்றி தான் இந்த கட்சிகள் சிந்திக்க வேண்டும். மீண்டுமொரு ஆயுத போராட்டமானது இனி சாத்தியமில்லை அதை இனி நவீன யுகத்திலே ஆயுத போராட்டத்தை ஆரம்பிக்கலாம். ஆரம்பிக்காமல் விடலாம். அது வேறு விடயம் ஆனால் அகிம்சை ரீதியிலான போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டு செல்வதற்கு தமிழ் மக்களை பிரதிபலிக்கின்ற அரசியல் தரப்புக்கள் தயாராகவிருக்கின்றதா. இன்று முஸ்லிம் மக்கள் அவர்களுக்கான பிரச்சனை வருகின்ற பொழுது தமிழர்களுடனும் கை கோர்க்கின்றார்கள் சிங்களவர்களுடனும் கை கோர்க்கின்றார்கள் ஏனென்றால் அவர்கள் இன்சா அல்லா எனக் கூறிவிட்டு தங்களது வாசியைத் தான் பார்க்கின்றார்கள். தங்களுக்கு ஒரு அவமானம் ஏற்பட்டால் அதையும் தாங்கிக்கொள்ளுகின்றார்கள் ஆனால் தங்களது இனம் அழியப்போகின்றது. சிங்கள இனம் எம்மை அழிக்கப்போகின்றார்கள். என்னும்பொழுது ஒருசாரார் அரசாங்கத்தோடு ஒத்து செல்லுகின்றார்கள். மறு சாரார் அல்ஹாவிற்காக மரணிக்கவும் தயார் என வருகின்றார்கள்.

எனவே 30 ஆண்டுகால ஆயுத போராட்டம் அதற்கு முன் 1957களில் சிங்கள கலவரங்கள் இப்படி எல்லாம் உருவாகி இன்னும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் சரியான முறையிலே வழங்கப்படவில்லை. இன்னும் 10 ஆண்டுகளில் டக்ளஸ் தேவானந்தாவின் ஆட்சி நிறைவேற வேண்டும். அல்லது அவர் தற்பொழுதே வேறு ஒருவரை நியமித்து விடுவார் அல்லது தமிழரசுக் கட்சியினுடைய தலைவர் மாவை சேனாதிராஜா இன்னொருவரை நியமித்து விடுவார். புளொட் சித்தார்த்தன் இன்னொருவரை நியமிக்கக் கூடும் அதுபோன்று ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இன்னொருவரை நியமிக்கக் கூடும் இப்படி எல்லாம் நியமித்துவிட்டு செல்வார்கள். இது பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நெறிகளை அல்லது வழிமுறைகளை இந்த தமிழ் தரப்புக்கள் செய்யவில்லை என்பது யுத்தத்தின் பின்னரான குற்றச்சாட்டுக்களாக இருக்கின்றன. போராட்டம் செய்யத் தான் வேண்டும் அவர்கள் எமக்கு எதிராக விடுகின்ற அம்புகளை நாம் அணைகொண்டு தடுக்காவிட்டால் தொடர்ந்தும் இந்த சிங்கள ஆக்கிரமிப்பு ஏற்படுத்தப்படும். யுத்தத்திற்கு பின்னரான காலகட்டத்தில் கலகொட ஞானசார தேரர் அல்லது இராவணபலசேன பொதுபலசேனவிற்கு கோட்டபாய ராஜபக்ச அவர்கள் அதிகாரத்தை வழங்கியிருந்தார். அவர்கள் தான் தான் கடவுள் என்ற ரீதியில் முழு இடங்களுக்கும் சென்று எல்லோருடனும் சண்டை பிடித்தார்கள். இங்கு முஸ்லிம் கலவரங்களை தூண்டியவர்களும் இவர்கள் தான். முஸ்லிம்கள் எதிரான போர் இங்கு இடம்பெறுவதற்கான காரணமும் பௌத்த தேரர்கள் தான். எனவே தமிழினத்தை மீண்டும் ஒருமுறை சீண்டிப்பார்த்து அரச பயங்கரவாதம் மீண்டும் ஒருமுறை போரிற்கான அழைப்பை விடுகின்றது. அப்படியிருக்கின்ற பொழுது நில ஆக்கிரமிப்பை ஒரு போர் இடம்பெற்று விட்டால் தொடர்ந்தும் இந்த நில ஆக்கிரமிப்புக்களை தமிழர்களிடம் கேட்கத்தேவையில்லை. அவர்களே சென்று நேரடியாக இந்த நில ஆக்கிரமிப்புக்களை தற்பொழுது இருக்கக்கூடிய இடங்களைக்கூட அவர்கள் அபிவிருத்தி செய்து விடுவார்கள்.

ஏனென்றால் அங்கு போர் நடக்கின்றது விடுதலைப்புலிகள் இருக்கின்றார்கள். இவர்கள் இருக்கின்றார்கள். இவர்களது எச்சங்கள் இருக்கின்றன என்றெல்லாம் கூறி அந்த வட்டத்திற்குள்ளே வந்து விடுவார்கள். எனவே இந்த நிலைப்பாட்டை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும். அதற்காக எமது அரசியல் ரீதியான போராட்டங்களை வடக்கிலும் கிழக்கிலும் முன்னெடுக்கின்ற ஒரு நபர்களாக தமிழ் அரசியல் தலைமைகள் திகழ வேண்டும். இவர்கள் அரச சொகுசு வாகனங்களில் திரிகின்றார்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் என்று இருக்கின்றார்கள் என்றெல்லாம் வாய் கிழியக்கூறுகின்ற பொதுமக்களில் ஒருசிலர் நீங்கள் இவர்களை போன்ற முன் போராட்டத்திற்கு வாருங்கள். நீங்களும் களத்தில் நின்று போராடுங்கள் மக்களுக்காக. ஒரு கையை மட்டும் தட்டினால் சத்தம் வரப்போவதில்லை. இரண்டு கைகளையும் தட்டினால் தான் ஓசை வரும் என்பது போல் ஊடகவியலாளர்களாகிய எமது பங்களிப்பை நாம் கொடுத்துக்கொண்டு தான் இருக்கின்றோம். ஏனென்றால் எங்களுக்கு தமிழ் தரப்பை குழப்பும் நடவடிக்கைகளை அரசாங்கம் திட்டமிட்ட முறையில் செய்துகொண்டு தான் இருக்கும். அவர்கள் தமிழ் தரப்பை மாபியாக்களாக வைத்திருக்கின்றார்கள். மாபியாக்கள் இல்லாமல் இந்த உலகத்தில் எந்த நாடும் இல்லை. தமிழ் தரப்பை ஒரு மாபியாவாக அல்லது கோவிலுக்கு நேந்துவிட்ட ஆடுகளாக வைத்திருக்கின்றார்கள். இன்று 125 மாபியாக்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அல்பட் துரையப்பா தொடக்கம் லக்ஸ்மன் கதிர்காமன் வரை 172 அரசியல் புத்தி ஜீவிகள் இந்த மண்ணிலே மடிந்திருக்கின்றார்கள்.

எனவே எங்களது பிரச்சனைக்கான தீர்வை எடுக்கும் வரையில் எங்களது பிரச்சனை தொடர்பில் நாம் ஆராய வேண்டும் இன்று கிழக்கை எடுத்தால் கிழக்கரசியலில் அங்கு பிள்ளையானும் சாணக்கியனும் சண்டை பிடிக்கின்றார்கள் அல்லது பிள்ளையானும் வியாழேந்திரனும் சண்டை பிடிக்கின்றார்கள். அல்லது இவர்கள் மூவரும் சண்டை பிடிக்கின்றார்கள் என இப்படி ஒவ்வொரு பிரச்சனைகளும் சென்று கொண்டிருக்கின்றது. அங்கு முஸ்லிம்களின் ஆதிக்கமும் சிங்களவர்களின் ஆதிக்கமும் கூடுதலாக இருக்கின்றது. பொலநறுவையில் இருந்து பொத்துவில் வரையிலும் மூன்று இனத்தவர்களினதும் ஆதிக்கமும் இருக்கின்றது. மூன்று இனமும் ஒற்றுமையாக வாழும் ஒரே ஒரு இடம் பொத்துவில் தான். அதைத்தவிர அக்கரைப்பற்று களுவாஞ்சிக்குடி நிந்தவூர் எல்லா இடங்களிலும் முஸ்லிம்களினது மதவாதம் இருக்கின்றது. கல்முனையை எடுத்துக்கொண்டால் கல்முனையை தரம் உயர்த்த வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கின்றார்கள். காத்தான்குடியில் இருந்து கொண்டு முஸ்லிம்கள் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். அங்கு தான் சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் இடம்பெறுவதற்கான பயிற்சிகள் கூட இடம்பெற்றது. காலப்போக்கில் இவ்வாறான இயக்கங்கள் உருவாகும் அதுபோன்று பொதுபலசேன இன்னொரு கட்டமைப்பை உருவாக்கி தமிழ் மக்களுக்கான கிராமப்புறங்களில் தாக்குதல்களை நடத்துவார்கள். பொதுபல சேனவை ஊடறுத்து இந்து பௌத்தம் இருந்ததாக கூறி அங்கு சிலைகளை வைப்பார்கள். அது போன்று ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மீண்டும் முஸ்லிம் தரப்புக்கள் தாக்குதல்களை ஏற்படுத்தலாம். ஆனால் தமிழ் மக்களுக்கான எங்களது இலக்கு சரியாக இருக்க வேண்டும் அதை சரியாக அடைய வேண்டும். அதை நாம் நிலைநிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் அத்தகைய நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். எனவே இன்றைய அரசியல் சூழ்நிலையிலேயே ஜெனீவா மட்டத்தில் பேசக்கூடிய பேச்சுக்கள் இருக்கின்றன. அதற்கான விடயங்களை நாம் எப்படி தயார்ப்படுத்தலாம் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட விடயங்களை எப்படி நாம் கையாளலாம். அதுமட்டுமல்லாது இன்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் அந்த கொட்டகைக்குள் இன்றும் இருக்கின்றார்கள் அதில் சிலர் இறந்தும் விட்டார்கள். எனவே இவர்களுக்கான தீர்வு தான் என்ன. இதற்கான மாற்று வழிகள் என்ன இந்த விடயங்களை எப்படி கையாளலாம் என்பதனை தமிழ் அரசியல் தலைமைகள் சிந்திக்க வேண்டும். ஆசனங்களுக்காக அடிபடுபவர்களாக தமிழ் தரப்பு இருக்கக்கூடாது. தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு 22 ஆசனங்களை பெற்று இன்று 10. 11 ஆசனங்களில் வந்து நிற்பதன் காரணம் அந்த ஒற்றுமையை இந்த அரசு சீர்குலைத்தது தான். எனவே இதிலிருந்து நாம் ஒரு திட சங்கற்பத்தை எடுத்து இன்று ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் நன்மை கருதி ஒரு போராட்டம் நிகழ்த்தப்படுமாயின் அதற்கு அனைவருமே ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஏனென்றால் எங்களுக்கான சுதந்திரம் இன்னும் வழங்கப்படவில்லை. ஆயுதம் ஏந்தி போராடிய போராளிகள் ஒருவராலும் தான் இந்த தமிழினம் உயிரூட்டமாக வெளிநாடுகளிலும் உள் நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று ஆயுத போராட்டம் இல்லை இனி நாம் சுதந்திரமாக வாழலாம் சிங்களவர்கள் தாம்பல தட்டில் வைத்து சமாதானத்தை எங்களுக்கு தந்துவிடுவார்கள் என்ற நப்பாசையை நீங்கள் கொள்ளக்கூடாது. ஏனென்றால் அகிம்சை ரீதியிலே வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை பெற்றுக்கொள்வதற்கான போராட்டம் இன்னும் முடியவில்லை. மாகாண சபைகளை பலப்படுத்த வேண்டும் உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்த வேண்டும் அவ்வாறு செய்யும் பொழுது தான் அகிம்சை ரீதியிலான அடுத்த அடுத்த கட்டங்களுக்கு செல்லலாம். அதன் பின்னர் 13 ஐ பற்றியும் 19 ஐ பற்றியும் யோசிக்கலாம்.

எனவே தமிழ் மக்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஒவ்வொரு தமிழ் கட்சிகளும் ஏதோவொரு வகையில் அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுத்தால் மட்டுமே அதை நாம் பெற்றுக்கொள்ள முடியும். சர்வதேச நாடுகளுக்கு அழுத்தத்தை கொடுத்தால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். சர்வதேச நாடுகளின் அழுத்தம் இலங்கைக்கு வருகின்ற பொழுது இனப்படுகொலைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் வருகின்ற பொழுது தமிழ் தரப்பை நாடி பணங்களை கொடுத்து எங்களை காப்பாற்றுங்கள் என்று கூறும் ஒரு சூழல் தான் தற்பொழுது உருவாகியிருக்கின்றது. எனவே இந்த பூகோள அரசியல் பரப்பிலே இந்தியா சீனா அமெரிக்காவினுடைய தலையீடுகள் இருக்கின்றன. இவற்றையும் தாண்டி சீனாவிற்கு இந்த நாட்டை விற்க முடியுமாக இருந்தால் தமிழர் தாயகம் வளர வேண்டுமாக இருந்தால் இதற்கு பணம் கொடுத்து வாங்குவதற்கு எத்தனையோ தொழில் அதிபர்கள் வடகிழக்கை தாருங்கள் என தயாராகத்தான் இருக்கின்றார்கள். எனவே எமது தமிழ் மக்களது இலக்கு இன்னமும் முடிவிற்கு வரவில்லை. தமிழ் தரப்பு யாராக இருந்தாலும் ஒன்றிணைந்து தமிழ் மக்களது இலக்கை அடையும் வரை அகிம்சை ரீதியிலான போராட்டங்களை அரசிற்கு எதிராக முன்னெடுக்க வேண்டும்.



**இரணியன்**




# பயங்கரவாத தடுப்பு சட்டத்தை விட ஆபத்தானதே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

**சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்**

இன்றைய தினம் வடக்கு கிழக்கிலே முழுமையான கதவடைப்பு ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது அனைத்து மக்களும் இன்று அதனை அனுஷ்டிப்பதன் காரணம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற ஒரு சட்டத்தை இன்று அறிமுகப்படுத்துவதாக இருந்தது. ஆனால் நாட்டிலே சர்வதேசத்திலே இதற்கு எதிராக எழுப்பப்பட்ட குரல்களுக்கு பயந்து இன்றைய தினம் அது பிற்போடப்பட்டிருக்கின்றது. அத்தோடு அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற பௌத்த சிங்கள மயமாக்கலுக்கு எதிராக வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் இன்று இப்படியாக தங்களது எதிர்ப்பை தெரிவிக்கின்றார்கள். பல சமய வழிபாட்டு தலங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. வணக்கத்திற்குரிய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அண்மையில் கிழக்கில் பல இடங்களுக்கு நாங்கள் சென்று பார்த்த பொழுது தமிழ் முஸ்லிம் மக்களது காணிகள் அபகரிக்கப்படுகின்றன. குச்சவெளி பிரதேச செயலக பிரிவினுள்ளே 3600 ஏக்கர் நிலம் தொல்லியல் திணைக்களத்திற்கு தேவை என பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 2015 ஆம் ஆண்டு கௌரவ கருஜெயசூர்ய அவர்கள் புத்தசாசன அமைச்சராக இருந்த வேளையிலே அது 267 ஏக்கருக்கு குறைத்து மாற்றப்பட்டிருந்தது. திரும்பவும் 3600 ஏக்கர் நிலத்தை அபகரிப்பதற்கு தற்பொழுது அளவிடல் செய்யப்பட்டிருக்கின்றது. புல்மோட்டை பிரதேசத்திலே முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமானகாணிகள்அபகரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் இது நிகழும் பொழுது நாங்கள் நீதிமன்றத்தை நாடவேண்டியுள்ளது. அரச இயந்திரம் இனப்பாகுபாடு காட்டியவண்ணமாக தொடர்ச்சியாக ஒரு இனவாத நோக்கோடு விசேடமாக இந்த அரசாங்கம் தற்பொழுது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இன்று காலையிலும் பாராளுமன்றத்திலும் நான் ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்தி கேட்டபொழுது அதைத்தான் கேட்டேன் இனவாத முகம் அப்படியே பளிச்சென தென்பட்டது. ஏதாவது ஒரு கேள்வியை வடக்கு கிழக்கில் இருந்து கேட்பதாக இருந்தால் உடனடியாக பயங்கரவாதி என்று முன்வரிசையில் இருக்கின்ற அமைச்சரே உச்சரிச்சு சொல்லுகின்றார் அந்த அளவிற்கு இனவாத முகத்தை தற்பொழுது வெளிப்படையாகக் காட்டுகின்ற இந்த அரசாங்கத்தோடும் சில புல் உருவிகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அதை ஒரு பக்கம் வைத்து விட்டால் எப்பொழுதும் எந்த காலத்திலும் அப்படியான புல் உருவிகள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் அரசாங்கம் என்ற ரீதியிலே நியாயமாக நடக்க வேண்டிய ஒரு பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அப்படி நடக்காமல் இருக்கின்ற பொழுது அதை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு இருக்கின்றது. அதை வெளிப்படுத்தி வெளிப்படுத்தி பலவிதங்களிலே நாங்கள் அதை எடுத்து சொல்லியும் அது மாறாமல் இருக்கின்ற பொழுது நாங்கள் இன்று செய்வதைப் போன்று ஒத்துழையாமை இயக்கம் ஒன்றை நடத்த வேண்டிய ஒரு கட்டாயம் எழுந்திருக்கின்றது. ஒத்துழையாமை என்று சொல்லும் பொழுது வெறுமனே கதவடைப்பு மட்டுமல்ல நாங்கள் வெகு விரைவிலே சட்ட மறுப்பு போராட்டமும் செய்ய வேண்டியதாக இருக்கும் அதையும் அரசாங்கத்திற்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.



இந்த மாதிரியான போக்கோடு தொடர்ச்சியாக இந்த அரசாங்கம் பயணிப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் எதிர்க்கின்றோம் மிக விசேடமாக இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பின்போடுவதனாலே எந்த பயனும் கிடையாது அது முற்றாக மீள கைவாங்கப்பட வேண்டும். அது மீள கைவாங்கப்பட்டால் தற்பொழுது இருக்கும் பயங்கரவாத தடுப்பு சட்டம் தொடர்ந்தும் இருக்கும் என்று நீதியமைச்சர் சொல்லுகின்றார். அப்படியல்ல பயங்கரவாத தடுப்பு சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் பயங்கரவாத தடுப்பு சட்டம் முற்றாக நீக்கப்படும் என்ற வாக்குறுதி 2017 ஆம் ஆண்டிலேயே தற்பொழுது ஜனாதிபதியாக இருக்கின்ற அன்றைய பிரதம மந்திரி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒரு வாக்குறுதியை கொடுத்திருக்கின்றார். அந்த வாக்குறுதியின் படி நடந்துகொள்ளாமையின் காரணத்தினால் தான் **GSP** வரிச் சலுகை இல்லாமல் போகின்றது. தற்பொழுது பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குகின்றோம் என்ற போர்வையிலே அதை விட பன்மடங்கு மோசமான ஒரு சட்டத்தை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமாக அரசாங்கம் அறிமுகப்படுத்தி ஆனால் இன்றைக்கு ஓரளவிற்கு பின்வாங்கியிருக்கின்றது. அந்த ஓரளவு பின்வாங்கியமை போதாது அது முற்றுமுழுதாக கைவாங்கப்பட வேண்டும் அதுவரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குவதற்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை இல்லாமல் பண்ணுவதற்குமான எங்களது போராட்டம் தொடர்ந்தும் நடக்கும். எங்களது காணிகளை அபகரிக்கின்ற விடயத்திலே அது எந்த காலத்திலும் எந்த நிலைமையிலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதது. எங்களது எதிர்ப்புக்கள் போராட்டங்கள் நடைபெறுகின்ற பொழுது அதை மீறி அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் பாரிய சட்டமறுப்பு போராட்டத்திற்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியதாக இருக்கும். பொருளாதார சிக்கலிலே இந்த நாடு சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்ற வேளையிலே இப்படியான ஒரு சிக்கலும் உங்களுக்கு தேவைதானா? என நாங்கள் உங்களிடத்தில் கேட்கின்றோம். பொருளாதார சிக்கலில் இருந்து மீளெழுவதற்கு நாங்களும் எங்களாலான இயன்ற உதவிகளை செய்கின்றோம் என சொல்லியிருக்கின்ற வேளையிலும் தொடர்ச்சியாக இன ரீதியாக மத ரீதியாக எங்களை அடக்கி ஒடுக்கி ஒரு பேரினவாத முகத்தை காண்பிப்பீர்களாக இருந்தால் நாடு இன்னும் அதாள பாதாளத்திற்குள் செல்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

# பிராந்திய செய்திகள்

## முல்லைத்தீவு – சிலாவத்தையில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை

முல்லைத்தீவு – சிலாவத்தையில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டு, உடைமைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது. அதிகாலை வீடொன்றுக்குள் நுழைந்த இரண்டு கொள்ளையர்கள் வீட்டிலிருந்த மூவர் மீது தாக்குதல் நடத்தி பணம், 10 பவுன் நகைகளை கொள்ளையடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




இதன்போது, கொள்ளையர்களால் பொல்லால் தலையில் தாக்கப்பட்ட 63 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸார், தடயவியல் பொலிஸார் இணைந்து மோப்ப நாய்களின் உதவியுடன் சந்தேகநபர்களின் தடயங்கள் தொடர்பில் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாவட்ட நீதிமன்ற நீதிபதி, சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சடலத்தை பார்வையிட்டு, பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளனர். தாக்குதல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

## கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்தல் மே இறுதிக்குள் நிறைவு

மே மாத இறுதிக்குள் கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய தீர்மானித்துள்ளோம். அத்துடன் மாணவர்களுக்காக கல்வியமைச்சு வழங்கும் 5000 ரூபா கொடுப்பனவு மற்றும் தொழில்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மீளச் செலுத்தும் அடிப்படையில் வங்கிகள் மூலம் வழங்கப்படும் 15,000 ரூபா கடனையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக புதிய மாணவர்களுக்கு கடந்த ஜனவரி மாதத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இஸ்ட்கோருக்கு அமைய விடய தானங்களுக்கு ஏற்ப திறமை அடிப்படையில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. என்றாலும் சிலர் மேன்முறையீடு செய்துள்ளனர். அதனால் தான் சற்று தாமதம் ஏற்படுகிறது. எனினும் எதிர்வரும் மே மாத இறுதிக்குள் கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும்.



அது மட்டுமன்றி அவர்களுக்கு கல்வி அமைச்சினால் தற்போது மாதாந்தம் 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மேலதிகமாக அவர்களின் உணவு தேவைக்காக வங்கிகள் ஊடாக 15,000 ரூபா வரை கடன் வழங்கப்படுகிறது. அவர்கள் கல்வியை முடித்துக் கொண்டு தொழிலுக்குச் செல்லும் போது அதனை மீளச் செலுத்தும் அடிப்படையிலேயே அது வழங்கப்படுகிறது. மேலும், ஆசிரியர் கல்விச் சேவையில் 60 வீதமான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இது கடந்த மூன்று வருடங்களாக நிலவும் பிரச்சினையாகும். எனினும் கடந்த வாரத்தில் அதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. அதற்கான பெறுபேறுகளும் வெளியிடப்படவுள்ளன.

## IMF கடனுதவி : 95 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தொடர்பிலான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் யோசனை பாராளுமன்றத்தில் 95 மேலதிக வாக்குகளினால் அன்று(28) நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பான யோசனை 95 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின் போது, சபையில் 79 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி, வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதுடன், அது தொடர்பில் குறித்த கட்சி ஆறு விடயங்களை முன்வைத்திருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் **A.H.M.** பௌஸி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் துமிந்த திசாநாயக்க, அரசாங்கத்தில் இருந்து எதிர்க்கட்சி தரப்பில் அமர்ந்த ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, நிமல் லன்ஸா, **A.L.M.** அதாவுல்லா ஆகியோர் யோசனைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் யோசனைக்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சுதந்திர மக்கள் கூட்டணி, உத்தர லங்கா சபாவ என அரசாங்கத்தில் இருந்து விலகி செயற்படுவோரும், தேசிய மக்கள் சக்தியும் யோசனைக்கு எதிராக வாக்களித்தனர்.

## 15 மாவட்டங்களில் உள்ள 55 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்கள்!

15 மாவட்டங்களில் உள்ள 55 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்கள் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் டெங்கு அபாய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், குருணாகல், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் டெங்கு அபாயப் பகுதிகளில் உள்ளடங்கியுள்ளன. இதேவேளை, மேல்மாகாணத்தின் சகல பிரதேசங்களையும் உட்படுத்தி கடந்த 26ஆம் திகதி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.




## வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டது!!

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் அன்றையதினம் (28) பிரதிஸ்டை செய்யப்பட்டது. வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்கள் கடந்த மாதம் இனம் தெரியாத நபர்களால் உடைத்து அழிக்கப்பட்டதுடன் சிலைகளும் களவாடப்பட்டிருந்தது.


இதனையடுத்து ஆலயத்தில் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யும் ஏற்பாடுகள் பல தரப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் நீதிமன்ற வழக்கினை காரணம்காட்டி தொல்பொருட்திணைக்களம் மற்றும் பொலிசார் அதற்கு தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். இந்நிலையில் இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த இருதினங்களிற்கு முன்னர் இடம்பெற்றிருந்ததுடன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு நீதின்றம் அனுமதி வழங்கியது.

உடைக்கப்பட்ட விக்கிரகங்களை அதே இடத்தில் மீண்டும் வைப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது. இதனையடுத்து அன்றையதினம்(28) காலை சுபநேரத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் அனைத்தும் மீண்டும் வைக்கப்பட்டது. பல சிரமங்களுக்கு மத்தியில் புதிய விக்கிரகங்கள் மலையின் உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டது. குறித்த நிகழ்வில் ஆலயத்தின் நிர்வாகத்தினர், பூசாரியார்,சமூக ஆர்வலர்கள், வேலன் சுவாமிகள், அகஸ்தியர் சுவாமிகள், அரசியல் தரப்பினர் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# சினி துளிகள்



## உதட்டு முத்தம் தருவது பெரிய விஷயம் அல்ல -அமலாபால்

தமிழில் கனா கண்டேன், பாரிஜாதம், மொழி, சத்தம் போடாதே, கண்ணாமூச்சி ஏனடா, வெள்ளித்திரை உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள பிரித்விராஜ் மலையாளத்தில் முன்னணி கதாநாயகனாக வலம் வருகிறார். இவர் தற்போது ஆடு ஜீவிதம் என்ற மலையாள படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தை இயக்குனர் பிளஸ்சி இயக்கி உள்ளார். பென்யாமின் புகழ்பெற்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு இந்த படம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் கதாநாயகியாக அமலாபால் நடித்துள்ளார்.

இந்த படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார். சவுதி அரோபியாவுக்கு வேலைக்கு சென்று அங்கு ஒட்டகம் மேய்க்கும் ஒரு பட்டதாரி இளைஞன் பற்றிய கதையே இந்த படம். பிரித்விராஜ் ஒட்டகம் மேய்ப்பவராக நடித்து இருக்கிறார். இப்படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி கவனம் பெற்றது. இந்த டிரைலரில் இடம்பெற்றிருந்த பிரித்விராஜ், அமலாபால் உதட்டு முத்தம் காட்சி பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இதுகுறித்து அமலாபால் அதிரடியாக பதில் அளித்துள்ளார்.

இந்த படத்தின் கதையை சொல்லும் போதே பிரித்விராஜ், உதட்டு முத்தக்காட்சி பற்றி விளக்கமாக கூறினார். படத்திற்கும், கதைக்கும் அந்த முத்தக்காட்சி மிகவும் அவசியம் என்பதால்தான் நான் நடித்தேன். மேலும், கதைக்கு தேவை என்பதற்காக நிர்வாணமாகவே நடித்திருக்கிறேன். உதட்டு முத்தம் கொடுப்பது எல்லாம் ஒரு விஷயமே இல்லை என தெரிவித்துள்ளார்.



## தயாரிப்பாளராக களமிறங்கும் நடிகர் ஜீவா



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகர்களான கமல்ஹாசன், சூர்யா, தனுஷ், விஷால், சிவகார்த்திகேயன், விஷ்ணு விஷால் உள்ளிட்ட பலர் தயாரிப்பாளர்களாக மாறி தொடர்ந்து பல படங்களை தயாரித்து வருகின்றனர். இந்த பட்டியலில் தற்போது நடிகர் ஜீவாவும் இணைந்துள்ளார்.

அதாவது, சூப்பர்குட் ஸ்டுடியோ என்ற பெயரில் பட நிறுவனம் தொடங்கி தயாரிப்பு தொழிலில் ஜீவா இறங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜீவா தயாரிக்கும் முதல் படத்தை இயக்குனர் ராஜேஷ் இயக்கவுள்ளதாகவும் இதில் கதாநாயகனாக ஜீவா நடிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், காமெடி ஜானரில் உருவாகவுள்ள இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கவுள்ளாராம். இப்படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ராஜேஷ் - ஜீவா கூட்டணியில் கடந்த 2009-ஆம் ஆண்டு 'சிவா மனசுல சக்தி' திரைப்படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

நடிகர் ஜீவாவின் தந்தை ஆர்.பி.சௌத்ரி சூப்பர் குட் பிலிம்ஸ் என்ற பட நிறுவனம் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திடீரென சினிமாவில் இருந்து விலகியது ஏன்? – அபிராமி



சினிமாவில் புகழ் பெற்ற கதாநாயகியாக வலம் வந்தவர்களில் ஒருவர் தான் நடிகை அபிராமி. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என சிறுவயதில் இருந்தே படங்கள் நடித்து வருகிறார்.

கமல்ஹாசனுடன் விருமாண்டி படம் வரை தொடர்ந்து நடித்து வந்த இவர் இடையில் ஒரு 10 வருடம் சினிமா பக்கமே காணவில்லை. அதன்பிறகு மீண்டும் நடிக்க வந்து இப்போது பல மொழிகளில் துணை கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார்.

10 வருட கேப் ஏன்
10 வருடம் சினிமாவில் இருந்து விலகியபோது என்னுடைய வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க வாய்ப்பு கிடைத்தது.

15வது வயதில் நடிக்க வந்தேன், பள்ளி படிப்பை கூட நான் சரியாக முடிக்கவில்லை, 21 வயது வரை நான் தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டிருந்தேன், ஒரு சராசரி பெண்ணாக என்னால் வாழ முடியவில்லை என கூறியுள்ளார்.

அந்த இடைவேளையை நான் யோசித்து தான் செய்தேன், அதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை.

## கேப்டன் மில்லர் ஷூட்டிங்கில் பயங்கர குண்டு வெடிப்பு




நடிகர் தனுஷ் நடிப்பில் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் படம் கேப்டன் மில்லர். இப்படத்தில் சிவ ராஜ்குமார், பிரியங்கா மோகன், சந்தீப் போன்ற பல நடிகர்கள் நடித்து வருகின்றனர்.

இப்படம் 1930 -ம் காலகட்டத்தில் நடந்த சம்பவத்தை மையமாக வைத்து இப்படம் தயாராகி வருகிறது.

தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முண்டன் துறையில் கேப்டன் மில்லர் திரைப்படத்தின் ஷூட்டிங் மும்முரமாக நடந்து வருகிறது.

இந்நிலையில் வனப்பகுதியில் டம்மி குண்டுகளை வெடிக்கவைத்தும், தீ மூட்டி சில காட்சிகளை எடுப்பதால் விலங்குகளை அச்சுறுத்தும் வகையில் இருப்பதாக புகார்கள் எழுந்துள்ளது.

இதனால் முறையாக அனுமதி பெறாமல் குண்டு வெடிக்கும் காட்சி படமாக்கப்பட்டதால் படப்பிடிப்பை நிறுத்த மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ரணில் அரசுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் ஏற்பட்ட அமைதி காலத்தில் லெப் கேணல் தியாகராஜன் யாழ்ப்பாணத்தில் நின்று செயல்பட்டவர். அரசியல் செயல்திட்டங்களுடன் தனது வேவு பணிகளையும் அங்கு திறம்பட செய்து கொண்டிருந்தார். குறிப்பாக விடுதலை போராட்டத்துக்கு எதிரான செயல்களில் ஈடுபடுபவர்கள் சிறிலங்கா துணை இராணுவ குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து இவர் தனது வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தார். தனது நடவடிக்கைகளுக்காக இவர் அதிகமாக கரவெட்டி நெல்லியடி பகுதிகளில் தான் நிலைகொண்டிருந்து செயற்பட்டு கொண்டிருந்தார். இப் பிரதேசத்தின் பகுதிகள் இவருக்கு அத்துபடியாக தெரிந்திருந்தன. பின்னர் வன்னி திரும்பியிருந்த தியாகராஜன் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் மீண்டும் படையினர் மீது தாக்குதல் நடவடிக்கைகளுக்காகவும் புலனாய்வு செயற்பாடுகளுக்காகவும் யாழில் தனது அணியுடன் சென்று தரையிறங்கியிருந்தார்.

எழில் சற்று தொய்வடைந்திருந்த தாக்குதல்கள் தியாகராஜனின் வருகைக்கு பின்னர் மீண்டும் புத்துயிர் பெற தொடங்கின மீண்டும் சிறிலங்கா படையினரின் முகாம்கள் ஊர்திகள் ரோந்து அணிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்தன. நாள்தோறும் படையினர் மீது அங்கு தாக்குதல் இங்கு தாக்குதல் என வெளிவந்த செய்திகளுக்கு பின்னால் தியாகராயனின் கைவரிசை இருந்தது. அதிகரித்த இந்த தாக்குதல்களால் திக்குமுக்காடிய சிறிலங்கா படையினர் தங்களை பாதுகாக்க (ஈபிடீபி) உட்பட தமது துணை இராணுவ குழுக்களை களத்தில் இறக்கினார்கள். சிறிலங்கா துணை இராணுவ ஒட்டு குழுக்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்களையும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என கருதுபவர்களையும் படுகொலை செய்யவும் கடத்தவும் கைது செய்யவும் அச்சுறுத்த தொடங்கினார்கள் நாளும் படுகொலை கடத்தல்கள் என்னும் அளவிற்கு இது மிகவும் மோசமான கட்டத்தை அடைந்தது. குடும்பமாகவும் பலர் இந்த படுகொலைக்கு பலியானார்கள். ஒட்டுகுழுக்களின் இந்த நடவடிக்கையால் மக்கள் மத்தியில் ஒரு அச்சம் ஏற்பட தொடங்கியது. இராணுவ நகர்வுகள் தொடர்பாக மக்கள் விடுதலைப்புலிகளின் புலனாய்வாளர்களுக்கு வழங்கிய தகவல்களும் இதனால் குறைவடைய தொடங்கின. இதனால் புலனாய்வு போராளிகள் களத்தில் இறங்கி தகவல்களை சேகரிக்கவும். நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய தேவை எழுந்தது. வேவு நடவடிக்கைகளை மக்களோடு மக்களாக இணைந்திருந்தே மேற்கொள்ள வேண்டிய நிலையில் படையினர் ஒட்டுகுழுவினரினால் அடையாளம் காணப்பட்டு போராளிகள் இழப்பை சந்திக்க தொடங்கினார்கள். மேஜர் புவியரசன் நெல்லியடி கொறவத்தை என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா படையினரால் சுட்டு கொல்லப்படுகிறார். மேஜர் கவியரசன் கப்டன் வினோத் ஆகிய போராளிகளும்

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



## சுழியோடி

## 18



தொடர்ச்சியாக நடந்த சம்பவங்களில் வீரச்சாவு அடைகின்றார்கள். இவ்வாறு போராளிகளின் இழப்புக்களால் யாழில் நடவடிக்கைகள் மீண்டும் மந்த நிலையை அடைகிறது. இந்த நிலையில் தாக்குதல் நடவடிக்கைகளை விட வேவு தரவுகளே அப்போதைய நிலையில் அவசியமாக கருதப்பட்டதால் தாக்குதல் நடவடிக்கைகளை தியாகராஜன் கைவிட்டு எஞ்சியிருந்த தனது ஒருசில போராளிகளுடன் வேவு நடவடிக்கையில் இறங்குகின்றார்.

மக்களோடு மக்களாக வாழ்ந்து வேவு தரவுகளை சேகரிக்கிறார். அத்துடன் சிறிலங்கா படை அதிகாரிகள் தங்கியிருக்கும் முகாம்கள் கனரக ஆயுத வெடிபொருள் களஞ்சியம் படைமுகாம் ஆட்டிலறி தளங்கள் என்பவற்றை தனது வேவு நடவடிக்கைகள் மூலம் அடையாளம் கண்டு பொறுப்பானவர்களுக்கு தகவல்களை வழங்குகின்றார். யாழ் குடாவிற்கு மேலும் அதிகளவான வேவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் அடுத்த கட்டமாக விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் வேவு படையணிகள் தரையிறக்கப்படுகின்றன. தீவு பகுதிகள் ஊடாகவும் மற்றும் பருத்தித்துறை பகுதி ஊடாகவும் யாழ்ப்பாணத்தின் கடல் வழியாக தரையிறங்கிய அவர்கள் ஆங்காங்கே நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இதன் போது புலனாய்வு துறை அணியின் போராளி ஒருவர் சிறிலங்கா படையினருக்கு எதிரான நடவடிக்கைக்காக தன்னை தயார்படுத்தி செல்லும் வேளை படையினரின் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டு சயனேட் அருந்துவதற்கு கூட அவகாசம் இல்லாத அளவிற்கு உயிருடன் பிடிபடுகிறார்.

கடுமையான சித்திரவதை விசாரணைகளால் இவரிடம் இருந்து சில வெடிபொருட்கள் வைத்திருக்கும் இடங்களையும் சில ஆதரவாளர்களையும் படையினர் இனம்கண்டு கொள்கிறார்கள். இது யாழ் குடாவிற்கான நடவடிக்கையில் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்துகிறது. இதனால் அடுத்தகட்ட முடிவொன்றை விடுதலைப்புலிகள் அவசரமாக எடுகின்றார்கள். அதாவது படையினரிடம் எதிர்பாராமல் அகப்பட்டு கொண்டால் விடுதலைப்புலிகளின் கொள்கைக்கு அமைய சயனேட் அருந்துவதற்கு பதிலாக குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவை தழுவி கொள்ளுவதும் இதன்மூலம் தானும் இறப்பதுடன் எதிரிக்கும் இழப்புக்களை ஏற்படுத்த முடியும். குப்பியை கடித்து வீரச்சாவை தழுவினாலும் இதனால் மேலும் சில நெருக்கடிகள் இருந்தன. குப்பியை கடித்து வீரச்சாவை தழுவும் போராளிகளிடம் இருக்கும் சில தடையங்கள் சில தரவுகளை வைத்து கொண்டு ஆதரவாளர்களையும் இனம்கண்டு கொள்கின்ற. விடுதலைப்புலிகளின் அடுத்தகட்ட செயற்பாடு குறித்து ஆராய்கின்ற நடவடிக்கையில் சிறிலங்கா பரையினர் ஈடுபட்ட நிகழ்வுகளும் நடந்தேறின.

இதனால் யாழ்குடாவில் நடவடிக்கைகளுக்கு செல்பவர்களுக்கென உடலோடு பொருத்தப்படும் யக்கட் (வெடிகுண்டு) புதிதாக வடிவமைக்கப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் நிற்கும் அனைத்து போராளிகளுக்கும் இது தொடர்பாக புலனாய்வுத்துறையின் தலைமை பீடத்தால் கட்டளையும் வழங்கப்படுகிறது. எக்காரணம் கொண்டும் எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக்கூடாது. உங்களை அளித்து கொள்ள வேண்டிய அவசியம் எழுந்தால் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இரண்டு எதிரியையாவது அளிக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளை வழங்கப்படுகிறது. இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் நடவடிக்கையில் நின்ற புதிதாக செல்லும் அனைத்து போராளிகளுக்கும் யக்கட் வழங்கப்படுகின்றது. இவ்வாறு இறுக்கமான காலகட்டத்தில் இறுக்கமான நிலையில் தான் புலனாய்வு போராளிகளின் செயல்பாடுகள் நடைபெற்று கொண்டிருக்கையில் கரவெட்டி அரசடி பகுதியில் தியாகராஜனை அடையாளம் கண்டு கொண்ட சிறிலங்கா படையுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுவினர் அவர் மீது துப்பாக்கி சூடு நடத்துகின்றார்கள். இதன்போது லெப் கேணல் தியாகராஜன் வீரச்சாவை தழுவிக்கொள்ளுகிறார்.



இதேவேளை போராளிகள் இருக்கும் இடமொன்றை அறிந்து கொண்ட சிறிலங்கா படையினர் மிக இரகசியமாக அப்பகுதியை சுற்றிவளைத்து அவர்களை உயிருடன் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கினார்கள். இதன் போது நிலைமையை உணர்ந்து கொண்ட போராளிகள் பொறுமையோடு தமது இலக்குக்குள் படையினர் வரும் வரை காத்திருந்து தங்களிடம் இருந்த குண்டுகளை வெடிக்க வைத்து தங்களை தாங்களே அளித்ததுடன் கைது செய்ய வந்த படையினர் சிலரையும் உயிரிழக்க வைக்கிறார்கள். தங்களையும் அளித்து தங்களிடம் இருந்த வெடிபொருட்கள் வேவு தரவுகளையும் அளித்து எதிரிக்கு அழிவை ஏற்படுத்தி இந்த மண்ணிற்கான அற்புதமான தியாகத்தை புரிந்து கொண்டார்கள் அந்த போராளிகள்.

இதேவேளை படையினரிடம் அகப்படும் நிலையில் அவர்கள் முன்கட்டியிருந்த யக்கட் குண்டினை வெடிக்கவைத்து வீரச்சாவு அடையும் சம்பவங்களும் இதனால் படையினர் இழப்புக்களை சந்திக்கும் சம்பவங்களும் அதிகரிக்க தொடங்கின. இவர் சிறிலங்கா படையினர் மத்தியில் அதிர்சியையும் அச்சத்தையும் புதிய பல சிக்கல்களையும் ஏற்படுத்தி இருந்தது. தங்களையும் அளித்து எதிரிக்கும் அழிவை ஏற்படுத்தும் அணிபோன்று யாழ்குடாவில் நிலை கொண்டிருந்த போராளிகள் செயற்பட்டு கொண்டிருந்தது. சந்தேகத்தின் பெயரில் ஒருவரை படையினர் கைது செய்வதற்கு அஞ்சுகின்ற அளவிற்கு நிலைமையை கொண்டு சென்றிருந்தது.

தொடரும்...

02 ஆம் பக்க தொடர்ச்சி...

எனவே இது புதிதல்ல. நல்லூர் கோவிலை உடைப்போம் என உங்களது வாயால் சொல்லுமளவிற்கு உங்களது மனிதில் வக்கிரபுத்தி இருக்கின்றது என்பது தான் இதனுடைய அடித்தள ஆட்டமாக இருக்கின்றது. ஜாதிகள் பார்ப்பது யாழில் இருக்கும் அடிப்படையானதொன்று அதனை மறவன்புலவு சச்சிதானந்தன் மட்டுமல்ல விபுலானந்த அடியார் மட்டுமல்ல அதற்கு மேலாக எவர் வந்தாலும் யாழில் இருக்கின்ற ஜாதியவாதத்தை ஒருபோதும் ஒழித்துவிட முடியாது. நீங்கள் மரணத்திற்கு பின்பும் அது நடக்கும் என்பது சாத்தியமில்லை.

எனவே அடுத்து வரும் தலைமுறை இவ்வாறு செயற்பட வேண்டும் என்றாலும் கூட வெளிநாடுகளில் இருக்கின்றவர்கள் மத ரீதியாக அனைத்து மதங்களுக்குமே சம உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்து கோவில்கள் இருக்கின்றன ஏனைய கோவில்கள் இருக்கின்றன யாரும் வழிபடலாம் அங்கு பூஜைகள் இடம்பெறுகின்றன மத சுதந்திரம் இருக்கின்றது. இங்கு ஜாதி சுதந்திரம் என்பது எந்த நாட்டில் தான் இல்லை அவர்கள் உள் மனதிலே யார் யார் என்பதனை பார்க்கின்றார்கள். இந்தியாவிலே எத்தனையோ சாதிகள் இருக்கின்றன. எங்களுக்கான ஒரு தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்பது எங்களுக்கு இது வரையில் கிடைக்கப்பெறவில்லை. அது போன்று இன்று ஜஸ்போதை பெரும்பாலும் இடம்பெறுகின்றது. பௌத்த விகாரைகள் பலாத்காரமாக தமிழர் தாயக பிரதேசங்களிலே அமைக்கப்படுகின்றது. இதை அருண் சித்தார்த்தன் அவர்கள் நிச்சயமாக பௌத்த விகாரைகளை கட்டுவேன் என கூறுகின்றார். இப்படியான துரோகத்தனமான செய்தியை மக்கள் முன்கொண்டு செல்கின்ற அருண் சித்தார்த்தன். இன்று மக்கள் மயப்படுத்தப்பட்ட பிரச்சனையை நீங்கள் ஒரு ஜாதிவாதம் வெறியாக்கி இன்று தமிழ் பேசும் மக்களிடையே குழப்பத்தை நீங்கள் தோற்றுவித்திருக்கின்றீர்கள். யாழில் உள்ள மக்கள் ஜாதி ஜாதியாகத் தான் அவர்கள் இருக்கின்றார்கள். ஒரு போதும் ஜாதிவாதத்தை வைத்து நாங்கள் யாழில் நடைமுறைப்படுத்த முடியாது. மன்னார், வன்னியை பொருத்தவரையிலே அங்கும் உயர் ஜாதிகளும் இருக்கின்றார்கள். இழிவான ஜாதிகளும் இருக்கின்றார்கள். நீங்கள் கூறுகின்ற இழிவான சாதியினரை மன்னார் வன்னி மட்டக்களப்பு மற்றும் மலையகத்திலும் இருப்பவர்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். ஜாதிவாத அரசியல் செய்வதாக இருந்தால் அருண் சித்தார்த்தன் அவர்களே உங்களுடன் தனிப்பட்ட கோபம் எதுவுமே எமக்கு இல்லை. நீங்கள் கூறும் கருத்துக்கள் ஒவ்வொன்றும் மக்களை பாதிக்கின்றனவாக இருக்கின்றன.

மன்னார் சிவபூமி என்ற விடயத்தை கூட நேரடியாக மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்களுடன் தொடர்பினை மேற்கொண்டு ஆதாரங்களை வெளியிடுங்கள் என கேட்டு எங்களது ஊடகத்தில் வெளியிட்டிருந்தோம். பதிவு செய்யப்படாத சில ஊடகங்களில் சில விடயங்களை வெளியிடுகின்றீர்கள். இவ்வாறெல்லாம் செய்ததனால். இன்று பதிவு செய்யப்பட்ட ஊடகங்களிடம் மக்கள் கேட்கின்றார்கள் ஜாதிவாதம் என்பது கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் தோற்றுவிக்கப்படுகின்றது. நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் ஜாதிகவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டினால் மீண்டுமொரு போரை இலகுவாக மேற்கொள்ள முடியும். அதுதான் பல நாடுகளிலே இடம்பெற்றிருக்கின்றது. இது அருண் சித்தார்த்தனுக்கும் நன்கு தெரியும். எனவே நீங்கள் அரசியல்வாதியாக செயற்பட வேண்டுமாக இருந்தால் அரசியல்வாதியாக செயற்படுங்கள். ஆனால் ஜாதியை வைத்து அவர்களை வைத்து நீங்கள் அரசியல் செய்யும் வேலையை செய்ய வேண்டாம். யாழில் அது சரிவராது இறுதியில் உங்களது உயிருக்கே ஆபத்து வரக்கூடிய சூழல் கூட உருவாகலாம். எனவே ஒரு மதக்கலவரத்தை உருவாக்கி அதனூடாக குளிர் காய்வதற்கு அரசாங்கம் கூட தயாராக இருக்கின்றது.

ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும் கோவில்களுக்குள்ளே ஜாதி வெறி பிடித்த பேச்சுக்களை பேசுவது அது உங்களது இயலாமைத் தன்மையாக இருக்கலாம். ஆனால் இறைவன் ஒரு நாளும் எந்த ஜாதி எந்த ஜாதி என கேட்பதில்லை. கருவறைக்குள் போய் குறைந்த ஜாதியினர் வழிபட்டாலும் இறைவன் தீட்டாகப்போவதில்லை காரணம் சக்தி வாய்ந்தவர் தான் இறைவன். எனவே கடவுளுக்கு தெரியும் ஆனால் மனிதன் அந்தந்த தொழிலுக்கேற்ப ஜாதிகளை பிரித்து வைத்திருக்கின்றார் அதிலும் கூடுதலாக யாழில் ஜாதி வெறி பிடித்த விடயங்கள் இருக்கின்றன. கோவில்களில் அனைவரும் சென்று வணங்குவதற்கான வழிகளை ஏற்படுத்துவதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. அதாவது மதம் சார்ந்தவர்களுடன் பேசி நீங்கள் அந்த நடைமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் அது வேறுவிடயம். ஆனால் இதற்குள்ளே அரசியலை நுழைக்கக்கூடாது நுழைத்தால் மிகவும் ஆபத்தான கட்டத்தில் முடியும் எனவே யாழில் பல ஜாதிகள் இருக்கின்றன. அவர்கள் உங்களை விடவும் திட்டம் போடுகின்றார்கள். உங்களால் தான் திட்டம் போட முடியும் என்றல்ல நீங்கள் உயர்வான ஜாதியினரை தாக்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டு செய்கின்றீர்கள் இதுவொரு கோழைத்தனமான செயற்பாடு. இதனால் உங்களது ஜாதி அதே மட்டத்தில் தான் இருக்குமே தவிர ஒரு போதும் உயர்வடையப்போவதில்லை. அனைவரும் ஒன்றிணைந்து இறைவனை வழிபடுகின்ற விடயத்தில் மட்டும் ஜாதியை பார்க்கக்கூடாது என்ற ஒரு நிலையை கொண்டு வந்தால் அது உண்மையிலே அருண் சித்தார்த்தன் கொண்டு வந்தார் என்பது வரவேற்கத்தக்கது. ஏன் பலர் கிறிஸ்தவத்திற்கு செல்லுகின்றார்கள் என்றால் காரணம் இதுதான். கிறிஸ்தவத்திலும் ஜாதி பார்க்கப்படுகின்றது. ஆனால் கோவில்களிலே வழிபடுகின்ற பொழுது அனைவரும் ஒருமித்தவர்களாக வழிபடுகின்றார்கள்.

எனவே கிறிஸ்தவத்திற்கு இவர்கள் செல்கின்றார்கள். அதுபோன்று ஏழ்மையிலும் செல்கின்றார்கள் வறுமையிலும் செல்கின்றார்கள். அவர்கள் கிறிஸ்தவத்தை நாடி அங்கு எமக்கு ஒரு ஆறுதல் கிடைக்கும். நல்ல ஒழுக்கங்களை போதிக்கின்றவர்களாக ஒவ்வொரு குருமார்களும் செயற்பட வேண்டும். அன்றிலிருந்து இன்று வரை பிராமணர்கள் தான் பூஜை செய்கின்றார்கள் அது நடைமுறையில் இருக்கின்றது. எனவே அவர்கள் அவர்கள் தமக்கு என கோவில்களை கட்டி பூஜை செய்பவர்கள் செய்யட்டும் கோவில்களை கட்டி வணங்குபவர்களை பிழை என சொல்ல முடியாது. எனவே கிறிஸ்தவத்திற்கு செல்பவர்கள் தாங்களது ஜாதி மறைக்கப்படும் என்பதற்காகவே செல்கின்றார்கள். இதில் ஜாதிகவாதம் இருக்கின்றது. மத திணிப்பை கொண்டு வருகின்றார்கள் என கூறுவதை விட சைவ சித்தார்ந்தம் அறநெறிகள் சிறுவயதில் இருந்தே போதிக்கப்பட வேண்டும். உங்களது பிள்ளைகளை ஆங்கிலம் படிப்பதற்கும் ஏனைய றோயல் கல்லூரிகளுக்கும் அனுப்புவதனால் அதன் வழியில் பிள்ளைகள் செல்கின்றனர். அறநெறிகள் போதிக்கப்படுவதில்லை. ஜாதிகள் இல்லையடி பாப்பா என பாரதியார் பாடியிருக்கின்ற பாடல் இருக்கின்றது. ஆனால் ஜாதி பார்க்காமல் யாரும் இருப்பதில்லை. எனவே இந்த ஜாதிகவாதம் என்பதனை அடிப்படையாகக் கொண்டு உங்களது அரசியலை செய்வதற்கு முற்படக்கூடாது அது உங்களது அரசியலுக்கும் மிகவும் ஆபத்தாகும். கொடுப்போர் உயர் ஜாதி கொடாதோர் இழிவான ஜாதியினர் என்றே பார்க்கப்படுகின்றது. எனவே நீங்கள் செய்யும் உதவிகளில் தான் அடுத்தகட்ட நகர்வுகள் நகர்த்தப்படும்.

# சித்த மருத்துவ உளச் சுகவாழ்வு



டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

அரச பதிவு இலக்கம் - 10,294
மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி,
தெல்லிப்பளை.

சித்த மருத்துவம் "பழமைக்குப் பழமையாகவும். புதுமைக்குப் புதுமையாகவும் அமையக் கூடிய புராதன விஞ்ஞானமாகவும் (**Ancient science**). சித்தர்களின் புராதன அறிவியல் ஞானமாகவும் (**Ancient ScientificWisdom**) அமைவதால். இன்று பல்வேறு புதிய தொற்றுநோய்களுக்கு உலக அரங்கில் விஞ்ஞானிகளும் ஆய்வறிஞர்களும் மூலிகை மருத்துவத் தீர்வுகளை நோக்கி தமது ஆய்வுப் பயணங்களை முனைப்புடன் நகர்த்திச் செல்வதைக் காணலாம்.

பாரம்பரிய சுகவாழ்வு முறைகளையும் (**Traditional models of well being**). புராதன புலமைத்துவத்தையும் (**Ancient expertise**). பாரம்பரிய அறிவையும் (**Traditional Knowledge**). பாரம்பரிய மருத்துவத்தையும் (**Traditional Medicine**). பாரம்பரிய வாழ்வியலையும் (**Old ways of living**). புதிய சிந்தனைகளுடன் (**Innovative ideas**). பகுப்பாய்வுத் திறன்கள் (**Analytical Skills**). புத்தாக்க சிந்தனைகளுடன் இணைந்த நலன் ஆய்தல் சிந்தனைகளுடன் (**Creative thinking and critical thinking**). சித்த மருத்துவ செவ்வியல் அல்லது தொல்சீர் நூல்களிலுள்ள (**Classical texts**) உளச் சுகவாழ்வுக் கருத்துகளை ஆராய்வது அரசியல் பொருளாதார நெருக்கடியான இக்கால கட்டத்தில் அவசியமான அவசரமானதேவையாக அமைந்துள்ளதுடன் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதும். மக்களின் மனங்களுக்கு தைரியம். உற்சாகம் ஊட்டுவதும் சித்த மருத்துவர்களின் அவசரமான அவசியமான பணியாக அமைந்துள்ளது.

சித்த மருத்துவ உளச் சிகிச்சை முறையில் சாத்வீகக் குணம். இரஜோ குணம். தமோ குணம் என்பவற்றைக் குறிப்பிட்டு. உணவுக்கும் மன சுக வாழ்வுக்கும் தொடர்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றது. அதிக காரமான உணவுகளைச் சாப்பிடும் போது கோபம் அதிகரிப்பதையும் தயிர்ச்சாதம் உட்கொள்ளும் போது சோர்வுத் தன்மை காணப்படுவதும் உணவுக்கும் மனதிற்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றது. கீரை. பச்சிலை மூலிகைகள். பழங்கள். மரக்கறிகள். பால். தேன் என்பன சாத்வீக உணவுகளாக அமைவதுடன் அவை சாத்வீகக் குணத்தை அதிகரித்துப் பொருளாதார நெருக்கடியானகாலத்தில் ஏற்படும் பயம் (**Fear psychosis**) பதற்றம். பதகளிப்பு (**Anxiety**) நிலையில் மன அமைதியை ஏற்படுத்துவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்.

புதிய தொற்று நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கு இரஜோ குணத்தை அதிகரிக்கும் உணவுகளான சுக்கு. உள்ளி. வெங்காயம் போன்ற நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் உணவுகளையும் சிறிதளவு உட்கொள்ள வேண்டும். மேலும் தானியங்கள். சிறு தானியங்களையும் உட்கொள்வதுடன் பயறு. கடலை. பருப்பு. போன்றவையும் உட்கொள்ளலாம். புளி எண்ணெய். பருத்தி இலைச் சாற்றெண்ணை. நெல்லிக்காய் எண்ணெய். பிரமி அல்லது வல்லாரை நெய். அமுக்கரா சூரணம். மல்லிச்சூரணம் போன்ற உளச் சீராக்கும் மருந்துகளை சித்த மருத்துவ உளநிபுணர்களின் ஆலோசனைப்படி கொடுக்க வேண்டும். சித்தர்களின் மனம் எனும் ஆய்வு கூடத்தில் (**Mental labs of minds of sages or seers**) முகிழ்த்தெழுந்த உளச் சுகவாழ்வு சிந்தனைகள். மூலிகை மருத்துவம். யோக உளச்சிகிச்சையுடன் (**Integrated therapy based on Yoga and herbal medicine**). யோகவுடன் இணைந்த வாழ்வியல் முறைகளையும் (**Yoga based lifestyle**) உள ரீதியான தரமான வாழ்வையும் (**Psychological quality of life**). உளத் தடுப்பு முறைகளையும். உளச் சிகிச்சை முறை களையும் (**Prophylactic and therapeutic**). முழுமையான உடல். மனம். ஆத்மிக. சமூக இணைந்த (**Holistic principles of body, mind, Soul and social**) அதி உன்னத ஆழமான அறிவியலாக (**Extremely deep science**) காணப்படுகின்றது.

சித்த மருத்துவ உளச் சிகிச்சை மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் அறிவியல் துறை (**Siddha Psycho neuro immunology**) அறிவு மூலம் ஆழ்ந்த தியானத்தில் இருந்து மனக் கண்ணில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் வெண்குழியங்கள் நுண்ணுயிர்களுடன் போரிடும் காட்சியை மனப்படமாக (**Visualisation**) செய்யும் மனவளப் பயிற்சிகள் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யலாம். ஆத்மிகப் பயிற்சிகளுடன் (**Spiritual practices**) தியானம் (**Meditation**). மன அலை களைச் சீர்படுத்தும் மந்திர ஒலிகள் (**Chanting of Rhythmic sacred words**) மூலம் வாழ்வியல் மாற்றங்களை (**life style modification**) ஏற்படுத்தி உளச் சுகவாழ்வை மேம்படுத்தலாம்.


பிரணாயாமம். தியானம். சூரிய நமஸ்காரம். உடல் தளர்த்தும் பயிற்சிகள். நாடிச் சோதனம். கபாலத்தி கிரிகை. அர்த்தஹலாசனம். பவன் முத்தாசனம். அர்த உஸ்ராசன. சவாசன (**Relaxation technique**). யோக நித்திரை (**Yogic sleep**) இவை செய்யப்படும் போது உளச் சுகவாழ்வுடன் கூடிய நோய் எதிர்ப்புத்திறனும் கிடைக்கும். இப்பயிற்சிகள் தகுந்த சித்த மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ் நோய்நிலைக்கு ஏற்றவாறு செய்யப்பட வேண்டும். மூச்சுப் பயிற்சி பல்வேறு உடல் நிலைகளில் வைத்துச் செய்யப்பட வேண்டும். மூச்சுப்பயிற்சியில் பிராண (**The vital life force**). மன அழுத்தம். பய பதகளிப்பு (**Stress and anxiety**) சீர்படுத்தும் உளப் பயிற்சிகளாகும். சித்த மருத்துவ யோக உளச் சிகிச்சை முறைகள். மன அமைதியையும் (**Mental peace and calmness**). பண்புசார் ஆத்மிகப் பலத்தையும் (**Moral and Spiritual Strength**). உளத் தெளிவையும் (**Clarity**) மன சுக வளத்தையும் (**Mental Health**). உணர்வுசார் (**Emotional**). உளம்சார் (**Psychological**). உடல் சார் (**Physical**). ஆத்மிகம் சார் (**Spiritual**). அதிதமான குணமாக்கும் சக்தியையும் (**Tremendous healing power**). உளரீதியான தன்னம்பிக்கையை (**self confidence**) வழங்கி உள ரீதியான நேர்முகச் சிந்தனையை (**Positive Thinking**) கொடுத்து. எமது உளச் சக்தியை ஆத்மிக ரீதியான இறைசக்தியுடன் (**Divine forces**) இணைக்கச் செய்து உள ரீதியான பேராற்றலுடன் இடர் காலத்தில் உளநோய் ஏற்படாமல் தடுப்பதுடன் (**Preventive**). பொருளாதார நெருக்கடியான சூழலில்உளப்பிரச்சினைகளை குணப்படுத்தும் (**Curative**) உளச் சிகிச்சை முறையை சித்த மருத்துவ உள நிபுணத்துவ சிறப்புச் சிகிச்சை முறையாக முனைப்புடன் செயற்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். யாழ்பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை தனது நாற்பது ஆண்டு கால பயணத்தில் சித்தமருத்துவ உளமருத்துவ பாடத்தை தனிப்பாடலான கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை வேதனைக்குரியது. மேலைத்தேய பாடங்களை கற்பிப்பதை விடுத்து. சித்தமருத்துவ நூல்களை ஆழமாகவும் விரிவாகவும் கற்பிக்கப்படவேண்டும்.

# மகளிர் பக்கம்

## கோடையில் அதிகரிக்கும் எண்ணெய் பசை சருமத்திற்கான டிப்ஸ்

தோல் நீக்கிய அப்பிள் பழத்தை நன்றாக மசித்து. அதனுடன் சிறிது தேன். ஓட்ஸ் பவுடர் ஆகியவற்றை கலந்து. அந்த கலவையை முகத்தில் பூசி சுமார் 1/2 மணி நேரம் ஊறவிட்டு. முகத்தை கழுவவும். உங்கள் வறண்ட சருமம் காணாமல் போய்விடும்.

தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும். அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.



மோரை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவினால் வறண்ட சருமம் புதுப் பொலிவடையும். பழுத்த வாழைப் பழத்தை நன்றாகப் பிசைந்து முகத்தில் தடவி. 20 நிமிடம் கழித்து கழுவினால். சருமம் மிகவும் மிருதுவாகும்.

எலுமிச்சையில் உள்ள சிட்ரிக் சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசையைப் போக்கிவிடும். எலுமிச்சைச் சாற்றை ஒரு பஞ்சு உருண்டையில் தொட்டு முகத்திலும் கழுத்திலும் பரவலாக தடவ வேண்டும். இந்த எளிய முறை சருமத்தின் எண்ணெய் பசையை போக்கி சிறந்த மாற்றத்தை உடனே கொடுக்கும்.

ஒவ்வொருவருக்கும் 2 வகையான சருமம் உள்ளது. ஒன்று உலர்ந்த சருமம். மற்றது எண்ணெய் வடியும் சருமம். எல்லா வகையான சருமத்தையும் இந்த கோடை வெயிலில் இருந்து பாதுகாக்க வேண்டும். உலர்ந்த சருமத்திற்கு கரட்டை நன்றாக அரைத்து ஒரு ஸ்பூன் தேன் கலந்து 20 நிமிடம் உடலில் பூசி பின் குளிர்ந்த நீரில் கழுவி விட வேண்டும். இதே போல் எண்ணெய் வழியும் சருமத்திற்கு மருந்து கடைகளில் இருந்து மூலிகை கலந்த பவுடரை வாங்கி பூசிக் கொள்ளலாம். இதன் மூலம் முகம் புத்தொளிபெறும்.

உங்களால் முடிந்த வரை உங்கள் சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைத்து கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் பழங்களை அதிகமாக சாப்பிட வேண்டும். தண்ணீர் அதிகமாக குடிக்க வேண்டும். ரோஸ் வாட்டரை சருமத்திற்கு உபயோகிக்க வேண்டும். சருமத்தை வறட்சி அடைய மட்டும் விட்டுவிடாதீர்கள். பின்னர் விளைவுகள் மோசமானதாக இருக்கும்.

## உடல் எடை வேகமாக அதிகரிக்க சாப்பிட வேண்டிய உணவுகள்

சிலரது உடல் மிகவும் ஒல்லியாக அழக்கற்று காணப்படும். அவர்கள் என்னதான் சாப்பிட்டாலும் உடல் எடை அதிகரிப்பதே இல்லை.

அப்படிப்பட்டவர்கள் உடல் எடை அதிகரித்து அழகான உடல் அமைப்பை பெற ஒரு சில வழி முறைகள்.

உடல் எடை வேகமாக அதிகரிக்க தினமும் இரண்டு அல்லது மூன்று வாழைப்பழங்களை சாப்பிடுங்கள். உடல் எடை அதிகரிக்கும்.

புரத சத்து அதிகம் உள்ள வேக வைத்த இரண்டு முழு முட்டையை மத்திய சாப்பாட்டுடன் எடுத்து கொள்ளுங்கள். உடல் எடை அதிகரிக்கும். குறிப்பாக மதியம் சோறு சாப்பிட வேண்டும்.

உடல் எடை அதிகரிக்க 15 உலர் திராட்சையை தினமும் சாப்பிட்டால் உடல் ஆரோக்கியத்தை அளித்து உடல் எடை அதிகரிக்கும். உலர் திராட்சையில் 99 கலோரிகள் அடங்கியுள்ளது.

தினமும் 10 முந்திரி சாப்பிடுங்கள் உடல் எடை அதிகரிக்கும். அத்துடன் 100 மிலி எருமை மாட்டு பால் குடியுங்கள். இது உடல் எடையை வேகமாக அதிகரிக்க செய்யக் கூடியது.

தினமும் மீன் சாப்பிட்டு வந்தால் அவற்றில் உள்ள ஊட்டச்சத்தினால் உடல் எடை வேகமாக அதிகரிக்கும். அதிலும் இறால் சாப்பிட்டு வந்தால் உடல் எடை வேகமாக அதிகரிக்கும்.

நாட்டுக் கோழி கறி. ஆட்டுக்கறி இவற்றை மதிய சாப்பாட்டுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். இரவும் அரிசி சோறு எடுத்துக் கொள்வதும் உடல் எடையை அதிகரிக்க செய்யும்.

உடல் எடை அதிகரிக்க சைவ உணவான பீன்ஸ் சாப்பிட வேண்டும். இதில் விலங்கில் உள்ள புரத சத்து அதிகம் உள்ளது. இதை அதிகம் உட்கொண்டாலும் எடை அதிகரிக்கும்.

பாதாம் உடல் எடை வேகமாக அதிகரிக்க, ஆரோக்கியமான உணவாகும். இது நரம்பு வளர்சிக்கு பயன்படும் உணவாகும். இதை தினமும்10 வீதம் ஊற வைத்து சாப்பிடுங்கள்.

கோழியின் நெஞ்சுக்கறி சாப்பிட்டு வந்தால். இதில் உள்ள கொழுப்பு சத்தானது உடல் எடை வேகமாக அதிகரிக்க பயன்படுகிறது.

அடிக்கடி வெண்ணெய். நெய் உணவில் சேர்த்து கொள்ளுங்கள். காலையில் நெய் ஊற்றிய தோசை எடுத்துக் கொண்டால் உடல் எடை அதிகரிக்கும்.

## அவித்த முட்டை பிரை செய்வது எப்படி?

**தேவையான பொருட்கள் : முட்டை - 4 , பச்சைமிளகாய் - 1 டீஸ்பூன் ,புதினா - சிறிதளவு, மஞ்சள்தூள் - அரை டீஸ்பூன் மிளகாய்த்தூள் - அரை டீஸ்பூன் , மல்லித்தூள் (தனியாத்தூள்) - 1 டீஸ்பூன் , கரம் மசாலாத்தூள் - அரை டீஸ்பூன் உப்பு - தேவையான அளவு , மிளகுத்தூள் - அரை டீஸ்பூன் , எண்ணெய் - 4 டேபிள்ஸ்பூன்**



செய்முறை : கொத்தமல்லி, பச்சை மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். ப.மிளகாயை விழுதாக அரைத்து கொள்ளவும். முட்டையை வேக வைத்து ஓட்டை உடைத்து கத்தியால் முட்டையை சற்று கீறி கொள்ளவும். அப்போது தான் மசாலா உள்ளே போகும்.

அடுப்பில் நான் - ஸ்டிக் பேனை வைத்து 4 டேபிள்ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும் நறுக்கிய பச்சைமிளகாய் பேஸ்ட்டை சேர்த்து வதக்கவும்.

மிளகாயின் பச்சை வாசனை போனதும் புதினாவைச் சேர்த்து ஒரு பிரட்டு புரட்டவும். இத்துடன் மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், கரம் மசாலாத்தூள், உப்பு மற்றும் மிளகுத்தூளைச் சேர்த்து அடுப்பை மிதமான தீயில் வைத்து நன்கு கலக்கவும். பொடிகளின் பச்சை வாசனை போனதும் வேக வைத்த முட்டையைச் சேர்த்து கிளறவும். முட்டையில் மசால் ஏறிவிட்டதா என்று உறுதி செய்துவிட்டு அடுப்பை அணைத்து பரிமாறவும். சூப்பரான அவித்த முட்டை பிரை ரெடி.

## ஐப்ரோ த்ரெட்டிங் கவனிக்க வேண்டிய விடயங்கள்

கண்புருவங்களை சீர் செய்யும்போது அதிலுள்ள சில முடிகளை நீக்குவதால் தாங்க முடியாத வலி இருக்கலாம். ஐப்ரோ திரட்டிங்கின்போது வேர்க்காலுடன் சேர்த்து முடிகளை அகற்றுவதால் இந்த வலி ஏற்படுகிறது. இந்த வலியைத் தவிர்க்க முடியாவிட்டாலும் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் உள்ளன. புருவங்களைத் திருத்த வேண்டுமென்று நினைத்தால் 2-3 வாரங்களுக்கு முன்பே நீங்கள் தயார் ஆக வேண்டும்.

புருவத்தில் நன்றாக முடி வளர்வதற்கு இந்த காலகட்டத்தை தாருங்கள். புருவம் நன்றாக வளர்ந்தபின்னர் திரெட்டிங் செய்யும்போது அதை அழகாக வில்போன்று வளைத்து மார்க் செய்து சிறப்பாக திரெட்டிங் செய்ய உதவும். அதேபோல் திரெட்டிங் செய்வதற்கு முன்பாக உங்கள் முகத்தை நன்றாகக் கழுவி விடவேண்டும். மேக்கப் போட்டிருந்தாலோ. சன்ஸ்கிரீன் பூசியிருந்தாலோ. அல்லது வேறு எண்ணெய்களை தடவியிருந்தாலோ முற்றிலும் நீக்கி விடுங்கள். ஏனென்றால் திரெட்டிங் அல்லது வேக்ஸிங் செய்யும்போது புருவத்தில் ஏற்படும் புதிய துளைகளுக்குள் சென்று வேறு விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடாது.

புருவத்தைத் திருத்திய பிறகு அந்தப் பகுதியின் மீது ஹெசல் அல்லது அக்னே ஆஸ்ட்ரின்ஜென்ட் கிரீமை தடவ வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். ஐப்ரோ திருத்துவதற்கு முன்பாக புருவப் பகுதியை மரத்துப்போகச் செய்யலாம். அதற்கென விற்கும் கிரீம்களை வாங்கித் தடவினால் புருவப் பகுதியில் உணர்வற்றுப் போகும். அப்படிப்பட்ட கிரீம்களை திரெட்டிங் செய்வதற்கு அரை மணிநேரத்துக்கு முன்பாக தடவிவிட வேண்டும். திரெட்டிங்கினால் ஏற்படும் வலி சிறிதுநேரத்துக்கு அசௌகரியமாக இருந்தாலும் சிலருக்கு சென்சிடிவ் ஸ்கின் இருப்பதால் அவர்களால் வலியை பொறுத்துக் கொள்ள முடியாமல் போகலாம். திரெட்டிங் செய்த 5 நிமிடங்கள் அல்லது கால் மணிநேரத்துக்கு புருவப் பகுதிகள் சிவந்திருப்பது சகஜம்.

திரெட்டிங் செய்வதற்கு முன்பாக அந்த இடத்தில் ஐஸ் பாக் வைத்து தடவலாம். சீவாத பென்சில் போன்ற பொருளை வைத்து புருவப்பகுதியில் சிறிது நேரம் தட்டிக் கொண்டே இருந்தால் திரெட்டிங்கின் போது வலி குறைவாக இருக்கும். திரட்டிங் முடிந்தபின்பும் புருவம், கண்களின் கீழ்ப்பகுதி அல்லது வாய் மரத்துப் போன உணர்வு இருக்கலாம். அப்படி இருந்தால் வாயைத் திறந்தபடி உங்கள் நாக்கை எல்லாபக்கமும் சுழற்றுங்கள். இதன்மூலம் புருவம். மரத்துப் போன பகுதி நரம்புகளைத் தூண்டிவிடலாம். ஐந்து நிமிடங்கள் இப்படித் தொடர்ந்து நாக்கைச் சுழற்றியபடி இருந்தால் சீக்கிரமே மரத்துப்போன உணர்வு போய்விடும். வாய்ப்பகுதியில் அரிப்பு போன்ற உணர்வு இருந்தாலும் சரியாகிவிடும்.

ஐப்ரோ திரட்டிங் செய்வதற்கு முன்பாக முதலில் குளித்து விடுங்கள். ஏனென்றால் குளிக்கும்போது புருவத்தில் இருக்கும் முடிகள் நீரில் நனைந்து வேர்க்கால்களும் இலகுவாகத் திறந்து இருக்கும். அதன்பின் திரட்டிங் செய்தால் முடிகள் எளிதில் வந்து விடும். புருவங்களைத் திருத்திய பிறகு குளிர்ந்த ஜெல்லை பூசி அந்த இடத்தை ஈரப்பதமாக்குங்கள். இதற்கு நீங்கள் கற்றாழை ஜெல். ஆளி விதை ஜெல் ஆகியவற்றை பயன்படுத்தலாம்.

# இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியும், வீழ்ச்சியும்

## ஒரு சிறப்பு பார்வை!



கடந்தவார தொடர்ச்சி...

இலங்கையின் அமைதி நிலவும் நிலையில் பல்வேறு அபிவிருத்தி சுட்டிகள் முதன்மையை காட்டியாகநிற்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பு உருவாக்கத்துக்குமான சாத்தியக்கூற்றைக் கொண்ட துறையாக சுற்றுலாத்துறையானது அண்மைக் காலங்களில் வளர்முக நாடுகள் மத்தியில் அதிகமாக உணரப்பட்டு வருகின்றது. சுற்றுலாத்துறை என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படினும் ஐக்கியநாடுகளின் உலக சுற்றுலாத்துறை நிறுவனம் அதைப் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்துள்ளது. சம்பளம் பெற்றுக் கொள்ளும் எந்த செயற்பாட்டுடனும் தொடர்பில்லாத.பொழுது போக்கு. வணிகம் மற்றும் வேறு நோக்கங்களுக்காக. 24மணித்தியாலங்களுக்கு குறையாமலும் தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேற்படாமலும் தமது வழமையான சுற்றுச் சூழலுக்கு வெளியே சென்று அங்குதங்குதலே ஓர் சுற்றுலாச் செயற்பாடாகும்.

மறுபுறத்தில். சொந்த இடங்களுக்கு அப்பால் பயணிக்கும் தனியார் மற்றும்குழுக்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து. தங்குமிடம். உணவு. குடிவகை.சில்லறைக் கடைகள். உல்லாச வசதிகள். வேறு உபசரணை சேவைகள் ஆகியன அடங்கிய பயண அனுபவத்தை வழங்கும் செயற்பாடுகள். சேவைகள்.தொழில்கள் என்பவற்றின் தொகுப்பே சுற்றுலாத் துறையாகும். முக்கியமான ஓர் சேவைத்துறைச் செயற்பாடாகவுள்ள இத்துறை ஸ்பெயின்.பிரான்ஸ். மெக்ஸிக்கோ. தாய்லாந்து போன்ற பல நாடுகளில் ஏற்கனவேஅதிசயங்களைத் தோற்று வித்துள்ளது. இருந்த போதிலும் உலகின் பலபகுதிகளில் பல அறிவுத் துறைகளுடன் தொடர்புபடும் வணிகமாகசுற்றுலாத்துறை ஆகிவிட்டது. உலகம். உயர்தரத்திலான பொருளாதார வளர்ச்சிமற்றும் அபிவிருத்தி என்பவற்றை நோக்கிச் செல்வதால். சுற்றுலாத்துறைச்செயற்பாடானது பொருளாதார ரீதியாக மிகுந்த வளவாய்ப்புக்களை கொண்டதாக மனிதச் செயற்பாடுகளால் அதிகளவுக்கு வழிப்படுத்தப்படுகின்றது. உலகமயமாதல் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள இப்புதிய பொருளாதார ஒழுங்கு காரணமாக சர்வதேச சுற்றுலாத்துறையின் வீச்சு விசாலித்து வருகின்றது என்றே கூற வேண்டும். வறிய மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் அந்நிய செலாவணி வருமானங்களைப் பெற்றுத் தருவதாலும். சுற்றுலாப் பயண இலக்குகளுக்கு மறைமுகமாக அதிகளவு வாய்ப்புக்களைக் கொண்டு வருவதாலும் சர்வதேச சுற்றுலாத்துறை மேலதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. சுற்றுலாத்துறை தற்போது ஆண்டுக்கு ஒரு றில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் வருமானம் ஈட்டுகின்ற உலகின் மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாக உள்ளது.

சர்வதேச வர்த்தகத்தின் வரிசைப் படுத்தலின் படி எரி பொருட்கள்.இரசாயனங்கள் மற்றும் மோட்டார் வாகன உற்பத்திப் பொருட்கள் என்பவற்றிற்கு அடுத்து நான்காவது நிலையிலுள்ள ஏற்றுமதி வகையாக சுற்றுலாத்துறை உள்ளது. 1993-2010 காலப் பகுதியில் உலக சுற்றுலாத்துறை வளர்ச்சியானது 04 சதவீதத்தை எட்டியுள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கு தொடருமாயின் இரண்டுதசாப்தங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரண்டுமடங்குகளாக அதிகரிக்கும். உலக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிவீதமானது 1990 - 2000 காலப் பகுதியில் 2.9 சதவீதமாகவும். 2000-2008 காலப்பகுதியில் 3.2 சதவீத மாகவும் காணப்பட்டது. ஆனால் ஆண்டுக்கான சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சிவீதம் 3.7 சதவீதமாகவும் உலகளவில் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெற்ற வருமானத்தின் வளர்ச்சி வீதம் 6.3 சதவீதமாகவும் இருந்து வருகின்றது. இதன் மூலம் சுற்றுலாத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் விரைவாக. அதிலும் இச்சுற்றுலாத்துறையானது சேவைத் துறையில் அதிகளவுக்கு நிலை நிறுத்தப்பட்டுள்ள போதும். அச்சேவைகள் மற்றும் தயாரிப்புக் கைத்தொழில்போன்ற பரந்த துறைகளை விடவும் விரைவாக வளர்வதற்கான வளவாய்ப்பைக் கொண்டுள்ள தென உயர்த்தறிய முடிகின்றது.

இத்துறையானது ஒரு நாளைக்கு 03 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை நெருங்குவதாக உள்ளது. 2010 இல் சர்வதேச சுற்றுலாப்பயணிகளின் வருகை 935 மில்லியனாகக் காணப்பட்டது. இது 2009ம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 7 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. சுற்றுலாத்துறையானது உலக ஏற்றுமதி வர்த்தக சேவைகளில் கிட்டத்தட்ட 30 சதவீதமாகவும். மொத்தப்பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியில் 06 சதவீதமாகவும் உள்ளது. சமூக. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஓர் உலகளாவிய ஒன்றிணைப்பின் பலமான குறிகாட்டியாகவும் இது உள்ளது. 2020 அளவில் சர்வதேசசுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.6 பில்லியனாக இருக்குமென உலகசுற்றுலா நிறுவனம் எதிர்பார்க்கின்றது. அண்மைக் காலமாக பல பிராந்தியங்கள் குறிப்பாக ஆபிரிக்கா ஆசிய-பசுபிக்மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பில் துரித வளர்ச்சிப் போக்கை காட்டுகின்றன. ஆனால் முன்பு பலமானநிலையில் காணப் பட்ட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற பிராந்தியங்களில் இவ்வாறான வளர்ச்சிப் போக்கை காணமுடிவதில்லை. உலக சுற்றுலாத்துறை. கடந்த இரண்டு தசாப்தங்களில் துரித வளர்ச்சிப்போக்கை காட்டியுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களிலுள்ள இடங்கள்.முக்கியத்துவம் பெற்று வருவதனால் உலக சுற்றுலாத்துறையின் போக்குமாற்றங்கண்டு வருகின்றது. வளர்ந்து வரும் சர்வதேச சுற்றுலாத்துறை மூலம்உலகில் அதிகரித்துள்ள செல்வத்தை தமது பொருளாதார வளர்ச்சிக்காக தாமும் பகிர்ந்து கொள்ளும் வகையில் வளர்முக நாடுகள் உபாயங்களை வகுப்பதற்காக தமது கொள்கைகள் மற்றும் சுற்றுலாத்துறைக் கருவிகள் என்பவற்றை மாற்றியமைத்து வருகின்றன.

2011 இல் முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த சுற்றுலா வருகையான 855.975 பதிவு செய்யப்பட்டதுடன் இது 2010 உடன் ஒப்பிடுகையில் 30.8சதவீதமானதொரு வளர்ச்சியாகக் காணப்பட்டது. குறிப்பாக மிகக் கூடுதலானசுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தும் (171. 374) ஐக்கிய இராச்சியம் (106. 082). ஜேர்மனி (55. 882). பிரான்ஸ் (48. 695). மாலைதீவு (44. 018).அவுஸ்திரேலியா (41.728)ஆகிய நாடுகளிலிருந்தும் இலங்கைக்கு வருகை தந்தனர். மத்திய கிழக்கிலிருந்தான சுற்றுலா வருகைகளும் 33.2 சதவீதத்தினால் அதிகரித்தன. 2011இல் சுற்றுலாவிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் ஐ.அ. டொலர் 830மில்லியன் வரையில் அதிகரித்தது. இதனை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 44.2 சதவீத அதிகரிப்பினை காட்டி நிற்கின்றது. 2010இல் சுற்றுலாப்பயணி ஒருவரினால் இரவொன்றிற்கு செலவிடப்பட்ட சராசரித்தொகை ஐ.அ.டொலர் 88. 2011இல் இது 97 ஐ.அ.டொலர் என்றளவிற்குஅதிகரித்துச் சென்றது. 2011 சுற்றுலா வருகையின் நோக்கத்தைப் பார்க்கும் போது **77%** வீதத்தினர் விடுமுறையை கழிப்பதற்காகவும் **8%** வீதத்தினர் வியாபார நோக்கங்களுக்காகவும் வருகை தந்ததுடன். மிகுதியினர் நண்பர்கள். உறவினர்களைப் பார்ப்பதற்காகவும். மாநாடுகள். கூட்டங்கள் மற்றும் சமய.கலாசார நோக்கங்களுக்காகவும் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

"இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள்" 2011 நிகழ்ச்சித் திட்டம் புதிய சந்தைகளிலிந்து சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு உதவியது. சீனா. ரஷ்யா. ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு போன்ற தோற்றம் பெற்று வரும் சந்தைகளிலிருந்தான அதிகரித்த வருகைகள் 2011 இல் காணப்பட்டது. 2011 இல் இலங்கையின் 08 தனித்துவமான தொனிப் பொருட்களின் கீழ் சுற்றுலாத்துறை விருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக கடற்கரை.பாரம்பரியம். இயற்கை வனப்பு. கானக விலங்குகள். விழாக்கள். விளையாட்டு மற்றும் துணிகர சாகசங்கள். மகிழ்ச்சி மற்றும் சாராம்சங்கள் என்பவற்றின் கீழ் இடம்பெற்றன. உற்பத்திச் சாதன அபிவிருத்திக்காக புதிய அமைவிடங்கள் குறிப்பாக கல்பிட்டி. பாசிக்குடா. டெருவ. குச்சவெளி ஆகிய இடங்களிலிருந்து வாகரை. யால. அம்பாந்தோட்டை. சிலாபத்துறை மற்றும் யாழ்ப்பாணம் வரைவிரிவாக்கப்பட்டன. 2011 இல் புதிய சுற்றுலாச் சட்டமொன்று உருவாக்கப்பட்டது. இது ஒரே சட்டத்தின் கீழ் தற்போதுள்ள 04 நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்களாக அதாவது. இலங்கை சுற்றுலா அதகார சபை. இலங்கை சுற்றுலாநிறுவனம் மற்றும் சுற்றுலா விடுதி முகாமைத்துவம் என இரு நிறுவனங்களாக ஒருங்கிணைந்து விரைவாக வளர்ந்து வரும் சுற்றுலாக் கைத்தொழிலின் சவால்களை எதிர்கொள்வதற்காக பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான கூடியளவு வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

டொலர் கையிருப்பு குறைந்து. பொருளாதார நெருக்கடிஏற்பட்டு. விலைவாசிஉயர்ந்து விட்டதால். இலங்கையில் போராட்டங்கள் நடக்கின்றன. ஆனால் போராட்டங்கள் காரணமாகவே டொலர் வரத்து மேலும் குறையக்கூடும் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகிறது. நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சரிவடைந்திருப்பதே இதற்குக் காரணம். இலங்கையில் அழகான கடற்கரைகளைப் பார்க்கலாம். வியக்க வைக்கும் சரணலாயங்களில் இயற்கையோடு இயற்கையாக விலங்குகளைக் காணலாம். இங்கு பௌத்த. இந்து மத ஆன்மிகத் தலங்களும் இருக்கின்றன. அந்நியச் செலாவணியை நாட்டுக்குள் கொண்டு வருவதில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது இலங்கையின் சுற்றுலாத்துறை. வெளிநாடு வாழ் தொழிலாளர்கள். **Tsp** ஆகிய துறைகளுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருக்கும் இந்தத் துறை. நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி வரவில் 13 முதல் 15 சதவிகிதம் வரையிலான பங்களிப்பை வழங்கியிருக்கிறது. "2019-ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு முடங்கிய சுற்றுலாத்துறை 6 மாதங்களுக்குப் பிறகு தான் படிப்படியாக மீளத் தொடங்கியது. சில மாதங்களில் கொரோனா பொது முடக்கம் வந்ததால். மீண்டும் முடங்கி விட்டது" என்கிறார். கொழும்புநகரில்ஹோட்டல்கள்நடத்தும் இந்தியரான வின்செண்ட். இலங்கையின் சுற்றுலாத் துறையில் வாகன ஓட்டுநர்கள். ஹோட்டல் உரிமையாளர்கள். உணவகங்களைநடத்துவோர். பயண வழிகாட்டிகள். பயண ஏற்பாட்டாளர்கள் என பல தரப்பினரும் அடங்கியிருக்கின்றனர். "இலங்கையில் சுமார் 5 லட்சம் பேர் சுற்றுலாத் துறையில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் சுற்றுலாத்துறையில் மறைமுகமாக ஈடுபட்டுள்ளோரையும் சேர்த்து மொத்தம் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்" என பிபிசி தமிழிடம் தெரிவித்தார் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுத் துறையின் தலைவர் கிர்மார்லி ஃபெர்னாண்டோ. இலங்கை வரலாற்றிலேயே சுற்றுலா உச்சத்தில் இருந்தது 2018-ஆம் ஆண்டில் தான். மொத்தம் 23 லட்சம் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தார்கள். 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைத்தது. அடுத்த ஆண்டிலேயே இது 3.6 பில்லியன் டொலர்களாகக் குறைந்து விட்டது.

2020-ஆம் ஆண்டில் 8 மாதங்கள் சர்வதேச விமான சேவை முடக்கப்பட்டதால். அந்த ஆண்டு வெறும் 5 லட்சம் பேர் மட்டுமே இலங்கைக்கு பயணம்மேற்கொண்டார்கள். 2021-ஆம் ஆண்டில் நிலைமை இன்னும் மோசம். கொரோனா அச்சம் காரணமாக இரண்டு லட்சத்துக்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார்கள். ஒரு பயணி இலங்கைக்கு வருகை தருவதன் மூலம் ஒரு நாளைக்கு சராசரியாக 170 முதல் 180 அமெரிக்க டொலர்கள் வரை இலங்கைக்கு வருமானம் கிடைப்பதாக கிர்மார்லி ஃபெர்னாண்டோ கூறுகிறார். இந்தியா. பிரிட்டன். ஜெர்மனி. பிரான்ஸ். போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள். இலங்கைக்கு வரும் சுமார் 46 சதவிகித சுற்றுலாப் பயணிகள் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்களையே பயன்படுத்துகின்றனர். இதுவும் அந்நியச் செலாவணி வரும் வழியாக இருக்கிறது. அரசு அளிக்கும் புள்ளிவிவரங்களின்படி பார்த்தால் கடந்த சில மாதங்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்திருக்கிறது. உதாரணத்துக்கு மார்ச் மாதத்தில் மட்டும் 1.06 லட்சம் பயணிகள் வந்திருக்கிறார்கள். ஆனால் ஏப்ரல் மாதத்தில் இது மீண்டும் குறைந்திருக்கிறது.

"நாட்டில் பிரச்சனைகள் வரும் போது முதலில் வீழ்ச்சியடையும் துறையாகவும். கடைசியாக மீண்டுவரும் துறையாகவும் சுற்றுலா இருக்கிறது" என்கிறார் வின்செண்ட். இலங்கையில் நிலவும் பல்வேறு வகையான சிக்கல்களும் அரசுக்கு எதிராக நடக்கும் போராட்டங்களும் உலக அளவில் பயணம் செய்யும் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக சுற்றுலாத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் கூறுகிறார்கள். மின்வெட்டும். எரிபொருள் பற்றாக்குறையும் தான் முக்கியமான பிரச்னைகளாக முன்வைக்கப்படுகின்றன. மின்வெட்டு காரணமாக தனது ஹோட்டலில் தங்கியிருந்த சுவிட்சர்லாந்து. போலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அறைக்கு வெளியே வந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறுகிறார் கொழும்பு மவுண்ட் பியர்ல் ஹோட்டலின் மேலாளர். "இப்போது 3 மணி நேரம் வரை மின்வெட்டு இருக்கிறது. சிறு ஹோட்டல்களில் ஜெனரேட்டர்கள் இருப்பதில்லை. பெரிய ஹோட்டல்களில் ஜெனரேட்டர்கள் இருந்தாலும் போதுமான டீசல் கிடைப்பதில்லை. மின்சாரம் இல்லாததால் பயணிகள் திரும்பிப் போய் விடுகிறார்கள்" அரசுக்கு எதிராக நடக்கும் போராட்டங்களில் சுற்றுலாத் துறைகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்கிறார்கள். சுற்றுலாத் துறையில் இருப்பவர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள் ஒன்று. பெட்ரோல். டீசல். எரிவாயுவை தட்டுப்பாடு இல்லாமல் வழங்க வேண்டும். இரண்டாவது தள்ளிவைக்கப்பட்ட கடன் தவணைகளுக்கான வட்டியைக் குறைக்க வேண்டும். மூன்றாவது மின்வெட்டை ரத்து செய்ய வேண்டும் என்பவை தான் அவை. கொரோனா காலத்தில் தள்ளிவைக்கப்பட்ட கடன் தவணைகளுக்கு கூடுதல் வட்டி போடப்படுவதாக அவர்கள் குறைகூறுகிறார்கள். பொதுவாக இலங்கைக்கு இந்தியாவில் இருந்து தான் அதிகமான எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். கொழும்பு. கண்டி. வனவிலங்கு சரணாலயங்கள். ராமாயணப் பயணம் போன்றவற்றுக்காக அவர்கள் இலங்கையை நாடுகிறார்கள்.

2018-ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் இருந்து 4.24 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். சராசரியாக அவர்கள் 7.4 நாள்கள் இலங்கையில் தங்குகிறார்கள். அவர்கள் மூலம் சுமார் 76.3 கோடி அமெரிக்க டாலர்கள் இலங்கைக்கு வருமானமாகக் கிடைத்திருக்கிறது. சுற்றுலாத் துறை மீண்டுவிட்டதாகக் கருதப்பட்ட கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் இந்தியாவில் இருந்து 55 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் மின்வெட்டு. எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவை அதிகரித்த பிறகு ஏப்ரல் மாதத்தில் 24-ஆம் திகதி வரை சுமார் 7 ஆயிரம் பேர் மட்டுமே சுற்றுலாவுக்கு வந்திருக்கிறார்கள். "ஹோட்டல்களில் மின்சாரம் இல்லை. சாலையில் வாகனங்கள் நிற்கின்றன. உணவகங்கள் எரிவாயு இல்லாததால் மூடப்பட்டிருக்கின்றன. அறைகளில் ஏ.சி. வேலை செய்யவில்லை. எப்படி சுற்றுலாப் பயணிகள் வருவார்கள்?" என்று கேட்கிறார் பயண வழிகாட்டியாக இருக்கும் யோகேஷ்.

இந்த மாதத்தில் மட்டும் தன் மூலம் வர வேண்டிய சுற்றுலாப் பயணிகள் 200 பேர் பயணத்தை ரத்து செய்துவிட்டதாக அவர் கூறுகிறார். சுற்றுலாப் பயணிகளுக்கு வாகனங்களை இயக்கும் பணியில் ஈடுபட்டு வரும் ரம்ஜான் தனது தொழிலை முற்றிலுமாக இழந்துவிட்டதாகக் கூறுகிறார். "வாகனக் கடன்களுக்கு தவணைகளைத் தள்ளி வைப்பதாகக் கூறினார்கள். ஆனால் அதற்கு வட்டி அதிகமாகப் போட்டு கடன்களைக் கட்டச் சொன்னதால் என்னிடம் இருந்த இரு கார்களையும் விற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போது ஆட்டோ ஓட்டும் நிலைமைக்கு வந்துவிட்டேன்" சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் கோரிக்கை குறித்து அரசு என்ன செய்கிறது என்ற கேட்டபோது. "கடன் தவணை பற்றி அரசு பரிசீலித்து வருகிறது" என்று கூறினார் சுற்றுலா மேம்பாட்டுத் துறைத் தலைவர் கிமார்லி. "உண்மையில் சுற்றுலாப் பயணிகள் அச்சப்படத் தேவையில்லை. போக்குவரத்து போன்றவற்றில் சில அசௌகரியங்கள் இருக்கலாம். போராட்டங்கள் அமைதியான முறையில்தான் நடக்கின்றன. அதனால் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை" என்கிறார் அவர். இலங்கையின் நாணய மதிப்பு குறைந்திருப்பதால் வெளிநாட்டுப் பயணிகள் தங்களது நாணயத்தின் மூலம் சிக்கனமாக இலங்கைப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் கிமார்லி கூறினார்.

எனவே 2023 ஐ நிறைவு செய்யும் காலப்பகுதியில் இலங்கை நாடு மீளவும் உல்லாச துறையில் பாரிய வீழ்ச்சியை சந்திக்கும் என ஆய்வுகள் கருதுகின்றன

**துரியோதரன்**

# விளையாட்டு




## 50 விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கை வீரர் உலக சாதனை !

குறைந்த எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய உலகின் முதலாவது சுழல் பந்து வீச்சாளர் என்ற சாதனையை பிரபாத் ஜயசூரிய தனதாக்கியுள்ளார்.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் அயர்லாந்துக்கு எதிராக நடைபெற்று வரும் போட்டியில் போல் ஸ்டேர்லினை ஆட்டமிழக்கச் செய்த போது தனது 50 ஆவது விக்கெட்டினை பெற்றுக்கொண்டார்.

அத்துடன் குறைந்த டெஸ்ட் போட்டியில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது இலங்கை வீரர் என்ற சாதனையையும் இவர் புரிந்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியை சேர்ந்த தோமஸ் டர்னர் 06 டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையை தனதாக்கியிருந்தார்.

எனினும் 7 டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது சுழல் பந்து வீச்சாளர் என்ற பெருமையை பிரபாத் ஜயசூரிய தனதாக்கிக்கொண்டுள்ளார்.

## ஐபிஎல் வரலாற்றில் குவிக்கப்பட்ட 2 ஆவது அதிகூடிய பவுண்டறிகள் : பஞ்சாபை பந்தாடிய லக்னோ 52 ஓட்டங்களால் வெற்றி

மொஹாலியில் வெள்ளிக்கிழமை (28) நடைபெற்ற போட்டியில் பஞ்சாப் கிங்ஸை பந்தாடி ஐபிஎல் கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது அதிகூடிய மொத்த எண்ணிக்கையைப் பதிவுசெய்த லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் மிக இலகுவாக 52 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. பூனே வொரியர்ஸுக்கு எதிராக பெங்களூருவில் 2013இல் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் பெற்ற (5 விக்கெட் இழப்புக்கு) 263 ஓட்டங்களே ஐபிஎல் வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய மொத்த எண்ணிக்கையாக இருக்கிறது.

அத்துடன் இந்தப் போட்டியில் மொத்தமாக 45 பவுண்டறிகளும் 22 சிக்ஸ்களும் குவிக்கப்பட்டன. இது ஐபிஎல் வரலாற்றில் குவிக்கப்பட்ட இரண்டாவது அதிகூடிய பவுண்டறிகளாகும். சென்னை சுப்பர் கிங்ஸுக்கும் ராஜஸ்தான் றோயல்ஸுக்கும் இடையில் 2010இல் நடைபெற்ற போட்டியில் குவிக்கப்பட்ட 69 பவுண்டறிகளே (39 பவுண்டறிகள், சிக்ஸ்கள் 30) ஐபிஎல் வரலாற்றில் ஒரு போட்டியில் பெறப்பட்ட அதிகூடிய பவுண்டறிகளாகும்.

பஞ்சாப் கிங்ஸினால் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 257 ஓட்டங்களைக் குவித்தது. கய்ல் மேயர்ஸ், அயுஷ் படோனி, மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், நிக்கலஸ் பூரண் ஆகியோரின் அதிரடிகளின் உதவியுடன் இந்த மொத்த எண்ணிக்கை குவிக்கப்பட்டது.

மொத்த எண்ணிக்கை 41 ஓட்டங்களாக இருந்தபோது அணித் தலைவர் கே. எல். ராகுல் 12 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். கய்ல் மேயர்ஸ் 24 பந்துகளில் 7 சிக்ஸ்கள், 4 சிக்ஸ்களுடன் 54 ஓட்டங்களைப் பெற்று 2ஆவதாக ஆட்டம் இழந்த போது மொத்த எண்ணிக்கை 5.5 ஓவர்களில் 74 ஓட்டங்களாக இருந்தது.

இந் நிலையில் அயுஷ் படோனிடன் 3ஆவது விக்கெட்டில் 46 பந்துகளில் 89 ஓட்டங்களைப் பகிர்ந்த மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 4ஆவது விக்கெட்டில் நிக்கலஸ் பூரணுடன் 29 பந்துகளில் மேலும் 76 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் மொத்த எண்ணிக்கையை 239 ஓட்டங்களாக உயர்த்தினார். படோனி 24 பந்துகளில் 43 ஓட்டங்களையும் ஸ்டொய்னிஸ் 40 பந்துகளில் 6 பவுண்டறிகள், 5 சிக்ஸ்களுடன் 72 ஓட்டங்களையும் நிக்கலஸ் பூரண் 19 பந்துகளில் 7 பவுண்டறிகள், ஒரு சிக்ஸுடன் 45 ஓட்டங்களையும் குவித்தனர்.

தீப்பக் ஹூடா 11 ஓட்டங்களுடனும் க்ருனல் பாண்டியா 5 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர். பந்துவீச்சில் கெகிசோ ரபாடா 52 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 18.5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 201 ஒட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. உபாதை காரணமாக சில போட்டிகளில் விளையாடாமல் இருந்து அணிக்கு மீள் திரும்பிய பஞ்சாப் கிங்ஸின் வழமையான அணித் தலைவர் ஷிக்கர் தவான் முதல் ஓவரிலேயே ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார்.




மற்றைய ஆரம்ப வீரர் பிரப்சிம்ரன் சிங் 9 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். ஆதர்வா தய்டே, சிக்கந்தர் ராஸா ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 78 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்த முயற்சித்த போதிலும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

சிக்கந்தர் ராஸா 22 பந்துகளில் 36 ஓட்டங்களுடனும் ஆதர்வா தய்டு 36 பந்துகளில் 66 ஓட்டங்களையும் பெற்றனர். லியாம் லிவிங்ஸ்டோன் (23), சாம் கரண் 921), ஜிட்டேஷ் ஷர்மா (24) ஆகிய மூவரும் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க முயற்சித்து விக்கெட்களை இழந்தனர். இப் போட்டியில் மாற்று வீரர் (இம்பெக்ட் ப்ளேயர்) உட்பட 9 பந்துவீச்சாளர்களை லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் பயன்படுத்தியது. அவர்களில் 7ஆவதாக பந்துவீச அழைக்கப்பட்ட யாஷ் தாகூர் சிறப்பாக பந்துவீசி 3.5 ஓவர்களில் 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். அவரை விட நவீன் உல் ஹக் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரவி பிஷ்னோய் 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

## ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் – இந்தியாவின் சாட்விக், சிராக் ஜோடி அரையிறுதிக்கு முன்னேற்றம்

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி துபாயில் நடைபெற்று வருகிறது. இதில் அன்று(28) நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர்கள் சாட்விக், சிராக் ஜோடி, இந்தோனேசிய ஜோடியுடன் மோதியது. இந்த ஆட்டத்தில் சாட்விக், சிராஜ் ஜோடி 21-11, 21-12 என்ற செட் கணக்கில் எளிதில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.



## ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் – காலிறுதியில் பி.வி.சிந்து அதிர்ச்சி தோல்வி

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி துபாயில் நடைபெற்று வருகிறது.

இதில் அன்று(28) நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து. தென்கொரிய வீராங்கனை ஆன் செ யங்குடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் பி.வி.சிந்து முதல் செட்டை 21-18 என கைப்பற்றினார். ஆனால் அடுத்த இரு செட்களை 5-21, 9-21 என்ற செட் கணக்கில் இழந்து அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.



# உலக வலம்

## அமெரிக்க எண்ணை கப்பலை சிறைப்பிடித்த ஈரான் கடற்படை

அமெரிக்காவுக்கு சொந்தமான எண்ணைக்கப்பல் குவைத்தில் இருந்து ஹூஸ்டன் நகருக்கு சென்று கொண்டு இருந்தது. இந்த கப்பலில் 24 இந்திய சிப்பந்திகள் உள்ளிட்ட ஊழியர்கள் இருந்தனர். அந்த கப்பல் ஓமன் தலைநகர் மஸ்கட் அருகே கடற் பகுதியில் சென்று கொண்டு இருந்தது. அப்போது அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த ஈரான் கடற்படை வீரர்கள் அமெரிக்க எண்ணைக்கப்பலை சிறைப்பிடித்தனர். ஈரான் கடற்பகுதிக்குள் கப்பல் நுழைந்ததாக கூறி அந்நாடு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.


இதற்கு அமெரிக்கா தனது எதிர்ப்பை தெரிவித்து உள்ளது. தங்கள் நாட்டு கப்பல் சர்வதேச எல்லையில் பயணித்த போது ஈரான் சிறை பிடித்து உள்ளதாகவும். இது சர்வதேச சட்டம். மற்றும் பிராந்திய பாதுகாப்பு நிலை தன்மைக்கு எதிரானது.இதனால் உடனடியாக எண்ணை கப்பலை ஈரான் விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து உள்ளது. முதலில் ஈரான் துணை ராணுவம் தான் கப்பலை கைப்பற்றியதாக தகவல் வெளியானது. பின்னர் தான் ஈரான் இந்த செயலில் ஈடுபட்ட விவரம் தெரியவந்தது. இந்த நிலையில் பெர்சியன் கடற்பகுதியில் ஈரான் நாட்டு கப்பலுடன் அடையாளம் தெரியாத கப்பல் ஒன்று மோதியதாகவும். இந்த சம்பவத்தில் ஈரான் சிப்பந்திகள் காயம் அடைந்ததாகவும். பலர் மாயமாகி விட்டதாகவும் அங்குள்ள செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது. ஆனால் ஈரான் நாட்டு கப்பல் மீது எந்த கப்பல் மோதியது என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

ஈரான் கடற்கரை பகுதியில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் வணிகத்துக்காக பயன்படுத்தப்பட்டு வரும் 5 கப்பல்கள் சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே அமெரிக்காவுக்கும். ஈரானுக்கும் இடையே அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கும் நிலவுகிறது. இந்த சூழ்நிலையில் ஈரான் கடற்படை அமெரிக்க எண்ணைக்கப்பலை சிறை பிடித்துள்ளது மேலும் பதற்றத்தை உருவாக்கி உள்ளது. ஈரான் கடற்படை



## நடுக்கடலில் கவிழ்ந்த படகு – 11 பேர் பலி

இந்தோனேஷியாவில் படகு ஒன்று கவிழ்ந்தால் 11 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் அன்று(27) தெரிவித்துள்ளனர். ரியாவு மாகாணத்தின் கரையோரத்தில் அன்று(27) இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இப்படகில் 74 பேர் பயணித்தனர். அவர்களில் 62 பேர் காப்பாற்றப்பட்டனர். 11 பேர் உயிரிழந்தனர். ஒருவரைக் காணவில்லை என தேடுதல் மற்றும் மீட்பு முகவரத்தின் பேச்சாளர் விதோதோ தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் சிறுவர்களுமாவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேம்பிலாஹன் துறைமுகத்திலிருந்து ரியாவு தீவுகளின் தான்ஜீங் நகரை நோக்கி இப்படகு சென்று கொண்டிருந்தது. இவ்விபத்துக்கான காரணம் குறித்து விசாரிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## புர்கினா பாசோவில் தீவிரவாதிகளால் 33 படையினர் பலி!



புர்கினா பசோவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குல் ஒன்றில் அந்நாட்டு அரச படையினர் 33 பேர் உயிரிழந்துள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது. ஆபிரிக்க நாடான புர்கினா பெசோவின் கிழக்குப் பிராந்தியத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்வத்தில் மேலும் 12 பேர் காயமடைந்துள்ளனர். புர்கினா பசோவில 2015 ஆம் ஆண்டு முதல். அல் கைதாவுடன் தொடர்புடைய குழுக்களுககும் அரச படையினருககுும் இடையில் மோதல்கள் நடந்து வருகின்றன. இதனால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன். மில்லியன் கணக்கானோர் தமது வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

## அமெரிக்காவில் சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை

பேஸ்புக். இன்ஸ்டாகிராம். டிக்-டாக் போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி. அதில் பதிவுகளை வெளியிடும் சிறுவர்கள் மனநல பாதிப்புகளுக்குள்ளாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தச் சூழலில். 13 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இது போன்ற சமூக ஊடகங்களில் கணக்குகளை உருவாக்கி தங்களது படைப்புகளை பதிவு செய்வதற்கு தடை விதிப்பதற்கான சட்டமூலத்தை அமெரிக்க பாராளுன்றத்தில் அனைத்து கட்சி எம்.பி.க்கள் தாக்கல் செய்தனர் . சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் பதிவுகளை பார்வையிட மாத்திரம் சிறுவர்களை அனுமதிக்கலாம் என அந்த வரைவு சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## தாய்லாந்தில் 12 நண்பர்களை கொன்ற பெண் கைது

தாய்லாந்து தலைநகர் பெங்கொக் நகரை சேர்ந்தவர் சரத்சிங் சிவுதாபார்ன் (வயது 32). கடந்த சில நாட்களுக்கு முன்னர் இவர் சிரிபோர்ன் என்ற தோழியுடன் கான் வோங்க் என்ற இடத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது சிரிபோர்ன் திடீரென மயங்கி விழுந்து இறந்தார். இதையடுத்து பொலிஸார் அவரது உடலை கைப்பற்றி மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனையில் அவர் சாப்பிட்ட உணவில் சயனைடு கலந்து இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.




இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் சரத்சிங் சிவுதாபார்னிடம் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் அவர் தோழி சிரிபோர்னை சயனைடு கொடுத்து கொன்றது அம்பலமானது. மேலும் 11 நண்பர்களையும் இதே பாணியில் தீர்த்து கட்டியது தெரிய வந்தது. இது தொடர்பாக பொலிஸார் சரத்சிங் சிவுதாபார்னை கைது செய்தனர். அவர் தற்போது கர்ப்பிணியாக உள்ளார். நகை-பணத்துக்கு ஆசைப்பட்டு அவர் இந்த கொடூர செயலில் ஈடுபட்டு உள்ளார். தனது அழகை பயன்படுத்தி 12 ஆண் நண்பர்களை தனது வலையில் விழ வைத்தார். பின்னர் அவர்களிடம் இருந்து பணத்தை பறித்து கொண்டு உணவில் சயனைட் கலந்து கொடுத்து கொலை செய்தார். அடுத்தடுத்து அவர் கொலையை அரங்கேற்றி உள்ளார். பொலிஸார் நடத்திய விசாரணையில் இந்த தகவல்கள் அனைத்தும் வெளியானது.

## உக்ரைன் மீது வான் வழித் தாக்குதல் 9 பேர் பலி

உக்ரேனில் அன்றிரவு(27) ரஷ்ய படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் குறைந்தபட்சம் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தலைநகர் கியேவ் உட்பட பல இடங்கள் மீது அன்றிரவு(27) ரஷ்யா வான் வழித் தாக்குதல்களை நடத்தியது.

உமான் நகர் மீது ஏவப்பட்ட ஏவுகணைகள். குடியிருப்புக் கட்டடங்களைத் தாக்கியுள்ளன. இதனால் 7 பேர் காயமடைந்ததுடன் மேலும் பலர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டினிப்ரோ நகரம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பெண்ணொருவரும் அவரின் 3 வயது மகளும் உயிரிழந்துள்ளனர் என உள்ளூர் மேயர் தெரிவித்துள்ளார். தலைநகர் கியேவ் மீது 51 நாட்களின் பின்னர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உள்ளூர் இராணுவ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

51 நாட்களின் பின்னர். கியேவ் மீது எதிரியின் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என இராணுவ நிர்வாகத்தின் தலைவர் சேர்ஜி பொப்கோ கூறியுள்ளார். இதேவேளை. தலைநகர் கியேவ்வில் ரஷ்யாவின் 21 ஏவுகணைகளையும். இரு ட்ரோன்களையும் தான் சுட்டு வீழ்த்தியதாக உக்ரேன் தெரிவித்துள்ளது.



# வவுனியா ஊடகவியலாளர்களால் தராக்கி சிவராமின் 18ம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு!!

ஊடகவியலாளர் தராக்கி சிவராம் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் அன்று (28.04) மதியம் இடம்பெற்றது. வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப.கார்த்தீபன் தலைமையில் அமையத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு தராக்கி சிவராமின் படத்திற்கு மெழுவர்த்தி ஏத்தியும், மலர்தூபியும் அஞ்சலி செலுத்தினர்.

இதன்பின் ஊடகவியலாளர் ந.கபிலநாத் மற்றும் வவுனியா ஊடக அமையத்தின் செயலாளர் கி.வசந்தரூபன் ஆகியோரினால் தராக்கி சிவராம் தொடர்பில் நினைவுரைகளும் இடம்பெற்றன. இதன்போது, தராக்கி சிவராம் கொலை செய்யப்பட்டு 18 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவரது கொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை எனவும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் நீதியான விசாரணையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும் அதற்கு தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளும் பாராளுமன்றம் ஊடாக அழுத்தம் கொடுக்க வேண்டும் ஊடகவியலாளர்கள் கோரிக்கையினை முன்வைத்தனர்.

அத்துடன், தற்போது நடைமுறைப்படுத்தவுள்ள புதிய பயங்கரவாத தடைச்சட்டமும் ஊடகவியலாளரின் செயற்பாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக அறிகின்றோம். அதற்கு எதிராகவும் ஊடகவியலாளர்கள் ஒன்றுபட்டு போராட வேண்டிய தேவை எழுந்துள்ளது. புதிய பயங்கரவாத தடைச் சட்ட வரைபை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் ஊடகவியலாளர்கள் இதன்போது கோரிக்கை முன்வைத்தனர். இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.





பொதிகை சலூன் & அழகு கலை

PHOTHIKAI BEAUTY CARE




T.P 077 571 5111, 076 361 1996

Near the Bus, Deppo Road, Kilinochchi




## வேலை வாய்ப்பு

வவுனியாவில் இயங்கி வரும்
தினப்புயல் வாராந்த பத்திரிகைக்கு
உதவி ஆசிரியர் மற்றும்
பக்க வடிவமைப்பாளர்கள் தேவை

விண்ணப்பிப்போர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன்
பதவியையும் குறிப்பிட்டு அனுப்பவும்
thinappuyal2014@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு : 077 6906182 , 077 8195947


இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 30.04.2023 அன்று வெளியிடப்பட்டது.